# சங்கானை கலவர நிலை கட்டுக்கடங்கியது

Registered as a Newspaper in Ceylon ★ விலை சதம் 10

# ஈழநாடு

EELANADU

தபால்பெட்டி எண். 49
போன் 389

National Tamil Daily

மலர் 10
இதழ் 1
தேசிய தினசரி

[illegible] பிலவங்க தை 28 ஜுல்ஹஜ் 11 ஞாயிற்றுக்கிழமை (11-2-68)

## பொலிஸார் தொடர்ந்து கண்காணிப்பு

— நமது நிருபர் எஸ். திருச்செல்வம் —

யாழ்ப்பாணம், ஞாயிறு சங்கானையில் இருபகுதியினருக்கிடையில் நடைபெற்ற கலவரம் பொலிசார் எடுத்துக்கொண்ட முயற்சியைத் தொடர்ந்து தற்போது கட்டுக்கடங்கிவிட்டதாக பொலிஸ் தலைமைக் காரியாலய அதிகாரிகள் தெரிவித்தனர்.

கலவரங்கள் நடைபெற்ற இடங்களைப் பார்வையிட்டு நிலைமையை நேரில் கண்காணிக்கவடபகுதி பொலிஸ் அதிபர் திரு. ஆர். சுந்தரலிங்கம் நேற்றுக்காலை சங்கானைக்கு விஜயஞ்செய்திருந்தார். கடந்த வியாழக்கிழமை நடைபெற்ற துப்பாக்கிச்சூட்டுக்கு இலக்கான 11 பேரில் வைரமுத்து ஞானப்பிரகாசம் ஆகிய இருவர் மிகவும் அபாயகரமான நிலையில் ஆஸ்பத்திரியில் சிகிச்சைபெற்று வருகின்றனர்.

இங்கு அமைதி ஏற்பட்டுள்ளபோதிலும் நிலைமை

[5-ம் பக்கம்பார்க்க]

# கோரபஸ்விபத்து: 23பேர்பலி பண்டாரவளையில் பயங்கரம்

## 150 அடி பள்ளத்தில் 17 பேர் துடிதுடித்து மாண்ட பரிதாபம்

பதுளை, சனி

**பயங்கர பஸ்விபத்தொன்றில் 17பேர் ஸ்தலத்திலேயே மாண்டனர். ஆறு பேர் ஆஸ்பத்திரியில் மரணமானார்கள். 7 பேர் உயிருடன் போராடிக்கொண்டிருக்கின்றனர்.**

இந்தக்கோர சம்பவம் பண்டாரவளைக்கருகே 4 மைல் தூரத்தில் நேற்றிரவு 10–30 மணியளவில் நடைபெற்றது பதுளை நோக்கி 50 பிரயாணிகளுடன் வந்துகொண்டிருந்த இந்த இ போ ச பஸ் திருப்பமொன்றில் 'திடுப்'பென 150 அடி ஆழமான பள்ளத்தினுள் பாய்ந்ததாம்.

பள்ளத்தினுள் பாய்ந்த பஸ் பிரயாணிகளுடன் நொருங்கி நசியுண்டது பிரயாணிகள் பலர்நெரியுண்டு துடிதுடித்து மாண்டனர். ஸ்தலத்தில இறந்தவர் தொகை 17 பேர் எனக் கணக்கிடப்பட்டுள்ளது. ஆறுபேர் ஆஸ்பத்திரியில் மரணமானார்கள்.

12 பேர் பதுளை ஆஸ்பத்திரியில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர். இவர்களில் 7 பேர் அபாயகரமான நிலையிலுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

### சாரதிக்கு மது வெறி

ஒரு பெண்ணும் இரு குழந்தைகளும் இந்தப்பயங்கர விபத்தில் உயிர் நீத்துள்ளனர். பஸ்ஸை ஒட்டிச்சென்ற சாரதி மதுவெறியிலிருந்ததாக விசாரணையில் தெரியவந்துள்ளது. அவரும் இவ் விபத்துக்குப் பலியாகிவிட்டார். பஸ் கண்டக்டர் அபாயகரமானநிலையிலிருக்கிறார்.

விபத்துக்குள்ளான இந்த பஸ் கொழும்பிலிருந்து பதுளை நோக்கி வந்துகொண்டிருந்த போது இப்பயங்கர விபத்துக்குள்ளானது.

இறந்தவர்களில் நால்வரின் சடலங்களே இதுவரை அடையாளங் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இறந்தவர்களின் ஈமைக்கிரியைகளை நடாத்துவதற்கு இ.போ.ச. பணம் வழங்குவதாகத்தெரிவித்துள்ளது.

கடந்த பத்துநாட்களுக்குள் நாட்டில் நடந்த பெரிய விபத்துக்களில் இது இரண்டாவதாகும். முதல் விபத்து .'வெல்லபிட்டிய வீதியில ஓர் இரட்டைத் தட்டுப்பஸ்ஸும் சாதாரண பஸ் ஒன்றும் மோதிக் கொண்டதால் ஐவர் இறந்ததுடன் பலர் பலத்த காயத்துக்குமுள்ளாளாகியிருந்தனர்.

## ஏழைப்பிள்ளைகளுக்கு உறுதுணையாளர் சங்கசேவை

யாழ்ப்பாணம், ஞாயிறு அரசாங்க அதிபர் தலைமையிலுள்ள யாழ் மாவட்ட உறுதுணையாளர்கள் சங்கம், யாழ். மாவட்டத்தில் வசதி குறைந்த ஏழைப்பிள்ளைகளுக்கு இவ்வருடம் சுமார் 500 ரூபா பெறுமதியான பாடப்புத்தகங்களை இலவசமாக வழங்கியிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி சங்கம் இதுவரை வடமராட்சிப்பகுதி, தெல்லிப்பழைப்பகுதி, கோப்பாய் பகுதி ஆகிய இடங்களைச் சேர்ந்த ஏழைப்பிள்ளைகளுக்கு இலவசப்பாடப் புத்தகங்களை வழங்கியதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இப்பகுதிகளில் சுமார் 100க்கு 80 வீதமான ஏழைப்பிள்ளைகளுக்கு இலவசப் பாடப்புத்தகங்கள் வழங்கப்பட்டிருப்பதாகவும் குறிப்பாக சமூக சேவைப்பகுதியில் இருந்து தர்மப்பணம் பெறும் பிள்ளைகளுக்குப் பெருந்தொகையான புத்தகங்கள் வழங்கப்படுவதாகவும் இந்த இலவச உதவி யாழ்.மாவட்டத்தின் ஏழைப் பகுதிகளுக்கும் விஸ்தரிக்க இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. [வி.நி]

## கிழக்கு மாகாண தமிழர் புனர் வாழ்வுக்கு முன்னணி

ஏருவூர், சனி

கிழக்கு மாகாணத் தமிழ் மக்கள் பொருளாதாரம், கல்வி, வேலையில்லாப்பிரச்சனை போன்றவற்றில் பின்தங்கிய நிலையிலுள்ளமையால் இந்த வையபின்தங்கிய நிலையினின்றும் விழிப்புணர்ச்சி ஏற்படுத்தும் பொருட்டும் இதற்கான திட்டங்களை ஏற்படுத்தி, சம்பந்தப்பட்ட மாகாணப் பிரதிநிதிகளின் ஒத்துழைப்புடன் இத்திட்டத்தைச் செயல்படுத்தும் பொருட்டும் திருவாளர் மெய்யப்பன் செட்டியார் தலைமையில் சென்ற 7-ம் திகதி தன்னாமுனையில் கூடிய கற்குடா, மட்டக்களப்பு, பட்டிருப்பு தொகுதிப்பிரமுகர்கள் அடங்கிய கூட்டத்தில் கிழக்குமாகாண தமிழர் புனர்வாழ்வு முன்னணி என்றபெயரில் ஒரு சங்கம் அங்குரார்ப்பணம் செய்துவைக்கப்பட்டது.

இதில் மூன்று தொகுதிகளிலிருந்தும் பின்வரும் உத்தியோகத்தர்கள் தெரிவு செய்யப்பட்டார்கள்.

போஷகர்கள்- கே. எம். மெய்யப்பன் செட்டியார் எஸ். மயிலிப்போடி. தலைவர்- எம். ஜே. இஸ்றேல் உபதலைவர்- ஏ. இராசையா காரியதரிசி- லூட்டி அவுஸ்கோன். உப காரியதரிசி- எஸ். கத்தப்போடி. தனாதிகாரி- வீ. சரவணமுத்து.

இதுசம்பந்தப்பட்ட மகஜர்களை முக்கிய எம். பிக்களுக்கு அனுப்பிவைப்பதென சங்கக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

வடபகுதி அஸைஸ்

## 13 கொலை வழக்குகள் விசாரிக்கப்படும்

யாழ்ப்பாணம், ஞாயிறு வடபகுதி முதலாவது பருவ விசாரணை இம்மாதம் 21-ந் திகதி நீதியரசர் டாக்டர் டபிள்யூ. தம்பையா முன்னிலையில் ஆரம்பமாகவிருக்கின்றது.

13 கொலை வழக்குகளும், 6 கொலை எத்தனிப்பு வழக்குகளும். ஒரு எறிகுண்டு வீசிய வழக்குமாக மொத்தம் இருபது வழக்குகள் இம்முறை விசாரணைக்கெடுத்துக் கொள்ளப்படவிருக்கின்றன. இவ்வழக்குகளில் 5 யாழ்ப்பாணம் நீதிமன்றத்திலும். 3 சாவகச்சேரி நீதிமன்றத்திலும், 1 ஊர்காவற்றுறை நீதிமன்றத்திலும், 2 முல்லைத்தீவு நீதிமன்றத்திலும், 2 கிளிநொச்சி நீதிமன்றத்திலும், 2 மல்லாகம் நீதிமன்றத்திலும், 1 வவுனியா நீதிமன்றத்திலும், 4 பருத்தித்துறை நீதிமன்றத்திலும் விசாரணை செய்யப்பட்டு சுப்ரீம்கோட்டுக்குப் பாரப்படுத்தப்பட்டனவாகும். (கா. நி.)

## சிறந்த அலுமினிய பாத்திரங்களுக்கு




டாலர் அலுமினியம்

யாழ். மாவட்டத்தில்

## பெரியசிரமதானம் ஏப்ரலில் நடைபெறும்

யாழ்ப்பாணம், ஞாயிறு யாழ்ப்பாண மாவட்டத்தில் மிகப் பிரமாண்டமான முறையிலமைந்த சிரமதான இயக்கம் ஒன்று எதிர் வரும் ஏப்ரல் மாதத்தில் மேற்கொள்ளப் படவிருக்கின்றது இவ் இயக்கம் கடந்த காலங்களில் இங்கு மேற்கொள்ளப்பட்ட சிரமதானப்பணிகளிலும் பார்க்க

(8-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரி விளம்பரம்

### தேவை

டைப்ரைட்டர்

பயிற்சியாளரின் உபயோகத்துக்கு பாவித்த ஆங்கில, சிங்கள, தமிழ் டைப்ரைட்டர்கள் தேவை. வேலுப்பிள்ளை வர்த்தகக் கல்லூரி, (1924-ல் ஸ்தாபிக்கப்பட்டது) பருத்தித்துறை. 1888

கல் உடைக்கும் தொழிலாளர்கள் தேவை. கியூப்புக்கு ரூ 10/- வீதம் நாள் சம்பளம். விண்ணப்பிக்கவும்:- எச். எம். ஆசீர்வாதம், உபதபாற்கந்தோர், ஊவாகுடாஓயா, திசமாராம வழியாக. 1811

காடு திருத்தும் கொந்தராத்துக்காரர்கள் தேவை. விண்ணப்பிக்கவும்:- எச். எம். ஆசீர்வாதம், உபதபாற்கந்தோர், ஊவாகுடாஓயா, திசமாராமவழியாக. 1812

தொகையான தொழிலாளர்களைக்கொண்ட 1000 ஏக்கர் பண்ணைக்குக் 'கன்டீன்' நடத்துவோர் தேவை. விண்ணப்பிக்கவும்: எச். எம். ஆசீர்வாதம், உபதபாற்கந்தோர், ஊவாகுடா ஓயா, திசமாராமவழியாக. 1813

முதிரை ரூ. 8/-, மில்ல ரூ. 7/50, ஹல்மில்ல ரூ. 9/50. ஜாஹு, மெற்தோர, அலம்ப, கஹமுல்ல, நெரலு, கொலன்ன, வீர, கிலிகுலா மற்றும் கல்குலியா ரூ 7/-. முதலியன கியூபிக் அடி வீதமாக பிரதான வீதியில் கொள்வனவாளரின் லொறிகளுக்கு ஒப்படைக்கப்படும். சுற்றுவட்டம் சுமார் 3 அடி. விண்ணப்பிக்கவும்;- எச். எம். ஆசீர்வாதம், ஊவாகுடா ஓயா, திசமாராம வழியாக. 1814

கணக்கப்பிள்ளை

கம்பெனிக்குபிணைப்பணம் கட்டக்கூடிய கணக்கப்பிள்ளை ஒருவர் தேவை. கடிதமூலம் விண்ணப்பிக்கவும். 16/1, காட்டுக் கந்தோர் ஒழுங்கை, யாழ்ப்பாணம். 1899

ஆசிரியர்

சிங்களம், ஆங்கிலம் இரண்டும் போதிக்கக்கூடிய ஆசிரியர் உடனே தேவை. ஆண், பெண் இருபாலாரும் தமது தகைமைகளுடன் பெப்ரவரி 17-ம் திகதிக்கு முன் விண்ணப்பிக்கவும் நிர்வாகி, 230, கே. கே. எஸ். ரோட், யாழ்ப்பாணம். 1898

உதவியாளர்கள்

எங்கள் வேலைகளில் உதவியாளர்களாய் இருப்பதற்கு ஆண், பெண் இருபாலாரும் தேவை. அநுபவம் தேவையில்லை. நேரில விண்ணப்பிக்கவும். எஸ் ரி. எம். இன்டஸ்றி பழைய பஸ் நிலைய முன், யாழ்ப்பாணம். 1703

### விற்பனைக்கு

நல்ல நிலையில் உள்ள சோமசெட் கார் விற்பனைக்குண்டு விபரங்கட்கு ஈழநாடு நிருபர், முல்லைத்தீவு. 1896

லொறி

டொச் லொறி CL 4000 தொடர், புதிய பற்றறி, டயர் ரூபா 7000/-. விபரங்களுக்கு: No 25, அம்மன் வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம். 1900

### கல்வி

புத்தகம்

6-ம் வகுப்புக்கணிதம் Iக்கு துணைநூலாக புதிய படிமுறைக் கணிதம், 6-ம் வகுப்பு I வெளிவந்துவிட்டது நூறு நாள்களுக்கு பயிற்சியும் விளக்கமும் விலை 1.90. ஆசீர்வாதம் அச்சகம், புத்தகசாலை, யாழ்ப்பாணம். 1897

இலங்கையில் தமிழ் சுருக்கெழுத்தை ஆரம்பித்தவரும், ஆங்கில சுருக்கெழுத்தை 46 வருடங்களாகக் கற்பித்தவருமான வேலுப்பிள்ளை இரு சுருக்கெழுத்தையும் மிக இலகுவான முறையில் கற்பிக்கின்றார் தற்போது ஐம்பது மாணவர்களுக்குமேல் படிக்கிறார்கள். இலங்கையில் தமிழ் ஆங்கிலசுருக்கெழுத்தாளர், திட்டச்சாளராகக் கடமையாற்றுபவர்களில் கூடுதலானோர் இக்கல்லூரியில் பயின்றவர்களாகும். பார்வையிட்டு உடன்சேர்ந்து படிக்கவும். வர்த்தகக் கல்லூரி, பருத்தித்துறை [1924-ல் ஸ்தாபிக்கப்பட்டது] 1887

வகுப்புகள்

ஜி. சி. ஈ. கலை / விஞ்ஞான / வர்த்தக / சிங்கள வகுப்புக்களுக்கு விண்ணப்பிக்கவும். யாழ்ப்பாண டியூட்டோறியல் கல்லூரி, (Jaffna Tutorial College) 60, அரசடி வீதி, (தட்டாதெரு சந்தி) யாழ்ப்பாணம். 1874

## வானொலி நிகழ்ச்சிகள்

### ஞாயிறு 11-2-68

### இலங்கை

செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00

**344 மீற்றர் & 61 மீற்றர்**

காலை 6-30 நாதாஞ்சலி, 6-35சைவநற்சிந்தனை, 6-40 கத்தோலிக்கநற்சிந்தனை 645 துதிப்பாடல்கள், 7-25 தினக்குறிப்பு 7-30 குரல்வளை, 8-00 இசைவேளை, 8-15 இஸ்லாமிய கீதங்கள்.

**344 மீற்றர் & 49 மீற்றர்**

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்ப இசை.

**344 மீற்றர் & 61 மீற்றர்**

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-30 ஞானமஞ்சரி.

இரவு 6-15 பாட்டு- கவுரீஸ்வரி ராஜப்பன், 6 45 பாவளம், 7-00 நேயர்விருப்பம், 7-30 முத்திநெறி- சைவசஞ்சிகை, 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-30 பேச்சு, 9-45 கதாப்பிரசங்கம்.

### சென்னை 1

காலை6-00வந்தேமாதரம், 6-05 துதிப் பாடல்கள், 6-30 நிகழ்ச்சிக் குறிப்புகள் 6-35 அருள் வாககு. 6-45 வாராந்திரவிமர்சனம், 6-50 வள்ளுவர் வாய்மொழி. 6-55 வாத்திய இசை, 7-15 தமிழில்செய்தி, 7-30 திரைகானம், 8-00 மெல்லிசை, 8-15 பாட்டு, 9-15 சித்திர அரங்கம். 9-30 சங்கீத உபந்நியாசம், 10-30 மதுர கீதம்.

பகல் 11-55 பிராந்தியச் செய்திகள், 12-00 பாட்டு 12-30 சூர்யகாந்தி, 1-00 வீணை, 1-30 வாத்தியக் கோஷ்டி, 1-45 திரைகானம், 2-00 தமிழில் செய்தி, 2-10 பாப்பா மலர்.

மாலை 3 00 நேயர் விருப்பம், 3-30 ஒலிச்சித்திரம்- 'பொன்னான வாழ்வு' 4-30 பாட்டு- கே. மகாதேவன், 5-30 திரைகானம்

இரவு 6-00 நாட்டுநடப்பு, 6-0[illegible] பிராந்தியச் செய்திகள் 6-15 நிகழ்ச்சிக் குறிப்புகள் 6-30 வாத்தியஇசை, 7-15 தமிழில் செய்தி, 7-30 நம் விவசாயிகளுக்கு, 8-30 சித்திரம்- நெஞ்சுக்கு நீதி, 9-15 பேச்சு-வழமைக்குவழி, 9 30 இலக்கிய ஏடு, 10-30 வீணை.

### திருச்சி 1

காலை 6-30 மங்களஇசை, 6 45 நிகழ்ச்சிக்குறிப்புகள், 6-50 பக்திப்பாடல், 6-55 அறவுரை, 7-00 துதிப் பாடல்கள், 7-15 தமிழில் செய்தி, 7-30 மீண்டும் கேட்போம், 8-15 பாட்டு, 9-15 மணி மலர், 11-55 பிராந்தியச் செய்திகள்.

பகல் 12-00 நீங்கள் கேட்டவை, 12-30 சூர்யகாந்தி, 1-00 பெண்ணுலகம், 1-50 இசைமஞ்சரி, 2-00 தமிழில் செய்தி.

மாலை 3-30 ஒலிச்சித்திரம், 4-30 பாட்டு, 5-30 மெல்லிசைக் கதம்பம்.

இரவு 6-05 பிராந்தியச் செய்திகள், 6-15 வாராந்திர விமர்சனம், 6-25 சிறுவர் அரங்கம், 6-45 கிராமியக் கலை, 7-15 தமிழில் செய்தி, 7-30 விவசாயிகளுக்கு, [illegible] 8-00 திரைப்பட இசை, 8-30 நாகஸ்வரம், 9-15 வழமைக்கு வழி, 9-30 இலக்கிய ஏடு, 10-15 வாத்திய இசை.

## விளம்பரம்

வவுனியா வடக்கு ப. நோ. கூ. சங்க சமாசத்திற்கு லிகிதர் பதவிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. கீழ்க்குறிப்பிடப்படும் தராதரங்கள் உள்ளவர் 20-2-68-க்கு முன் விண்ணப்பங்களை சமாச காரியதரிசிக்கு அனுப்புதல் வேண்டும்.

தகைமைகள்

1. வயது: 21 தொடக்கம் 35 வரை.
2. கல்வித்தராதரம்: சிரேஷ்ட பாடசாலைத் தராதரப்பத்திரம், அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் சித்தியெய்தி இருக்க வேண்டும். அத்துடன் கூட்டுறவுக் கலாசாலையில் பயிற்சி பெற்று இருக்கவேண்டும். தட்டெழுத்து (ஆங்கிலம்) தெரிந்திருந்தால் விசேட தராதரமாய்க் கணிக்கப்படும்.
3. பிணைப்பணம்: ரூபா ஓர் ஆயிரம் ரொக்கமாய்க் கட்டவேண்டும்.
4. சம்பளம்: ஆரம்ப சம்பளம் ரூபா 125/- மட்டும். பின் திறமையைக் கணித்து கூட்டிக் கொடுக்கப்படும்.

விண்ணப்ப முடிவு திகதி 20-2-68.

சி. உ. வல்லிபுரம்,
கௌரவ காரியதரிசி. 443

## கேள்விவிளம்பரம்

செம்பியன்பற்று கிராமசபைத் தலைவரால் கீழ்த்தரப்படும் வேலைகட்குத் தனித்தனியாக 19-2-68 காலை 9-30 மணிக்கு முன்பு கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும். இதற்கான பத்திரங்கள் 17-2-68 காலை 9-00 மணி முதல் பி. ப 2-00 மணி வரை எமது காரியாலயத்தில் கீழ்த்தரப்படும் விகிதத்தில் பிணை செலுத்தியதும் வழங்கப்படும்.

மற்றும் விபரங்களை சபை அலுவலகத்திலும் யாழ்ப்பாணப் பிரதேச உள்ளூராட்சி அமைச்சின் காரியாலயத்திலும் அறிந்துகொள்ளலாம்.

வேலைகள்:

1. ஆழியவளை உலாந்தாக்காட்டு றோட்டு தார் வேலை. கேள்விப் பிணை: ரூபா 50-00. பத்திரப் பணம் ரூபா 10-00.

2. தாளையடி ஆழியவளை மீன்பிடி வீதிகளி வேலை கேள்விப்பிணை: ரூபா 50-00 பத்திரப்பணம் ரூபா 10-00.

பத்திரப் பணம் திருப்பிக் கொடுபட மாட்டாது.

ஐ. ஆ ஐயம்பிள்ளை,
கி. ச. தலைவர்

கிராமசபை அலுவலகம்,
செம்பியன்பற்று,
3-2-1968. 445

**வியாபாரம்பெருக விளம்பரம் செய்க**

## திருமணம்

செல்லம் 12-2-68 செல்லப்பா

நாள்: பிலவங்க ஆண்டு தைத் திங்கள் 29-ம் நாள் திங்கட்கிழமை.

நேரம்: முற்பகல் 11-55.

இடம்: மணமகள் இல்லம்.

நண்பர்களும் உறவினர்களும் வருகை தந்து மணமக்களை வாழ்த்தியருளுமாறு அன்புடன் அழைக்கிறோம்.

தங்கள் நல்வரவை நாடும்

சி. வைரமுத்து தம்பதிகள்
''சந்திர வாசா''
உடுவில்,
சுன்னாகம்.

திருவாட்டி பொ. தம்பு
''தமிழன்னை இல்லம்''
சங்கானை.

444

## WANTED
### A Male Clerk

Pass in S. S, C. or equivalent exam, with English.

Knowledge of typewriting and Book-Keeping.

Office Experience and Co-operative Training preferred.

Age : 26—35.

Salary : $\frac{100/- —175/-}{7/50 \times 10}$

with allowance prescribed by the Union.

Total initial earnings : 100/-+101/60+17/50=219/10

If selected security in cash Rs. 1000/-

Application close on 29-2-68

"Application for Clerk" should appear on the top left hand corner of the envelope.

Apply under registered cover with two recent testimonials.

President,
Vali West M.P.C.S. Union,
Chankanai. 442

## கருவிகள் அறைப் பரிசரர் உதவிப் பரிசரர் பதவிகள் மின்சார திணைக்களம்

மேற்படி இரு பதவிகளுக்கும் இதனால் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள் இவ் அலுவலகத்தில் 22-2-68-ம் திகதி நண்பகல் 12 மணி வரை ஏற்றுக் கொள்ளப்படும்.

தராதரம்: விண்ணப்பகாரர் தமிழ் ஆங்கில மொழிகளில் எழுத, வாசிக்கத்தெரிந்தவராகவும், பதிவுகள், பதவேடுகளை நிர்வகிக்கக் கூடியவராகவும், இருத்தல் வேண்டும். தலைக்கு மேலாகச் செல்லும் கம்பிகள், தரைக்குக்கீழாகச் செல்லும் கம்பிகள், மற்றும் வினியோக வேலைகள் மீது, மின்சார திணைக்களத்தில் ஒழுங்கான பாவனையில் இருந்துவரக்கூடிய கருவிகளின் பெயர்கள் பற்றிய அறிவுடையவராகவும் இருத்தல் வேண்டும். தேவையேற்படும் காலங்களில கருவிகளைப் பழுதுபார்க்கவும், கூர்மையாக்கவும், கருவிகளைத் தொழிற்படு நிலையில் முறையாக வைத்திருக்கவும் கூடியவராகவும் இருத்தல் வேண்டும்.

வயசு: விண்ணப்பகாரர் 20 வயதிற்கும் 40 வயதிற்கும் இடைப்பட்ட வயதினராகவும், ரூ 5000/- பெறுமதிக்கான பிணையைஒன்றில் காசாகவோ அல்லது நம்பிக்கை உத்தரவாத முறியாகவோ செலுத்த ஆயத்தமாகவிருத்தல் வேண்டும்.

சம்பளமும் ஏனைய நிபந்தனைகளும்: பதவியில் நியமனம் பெறுவோர் ஓர் ஆறுமாத காலத்திற்குத் தகுதிகாண் நிலையில் வைக்கப்படுவார் என்பதோடு, வழமையான படிகளுடன் கூடிய ரூ 1/20 நாளாந்த சம்பளம் இக்காலத்தில் அவருக்கு வழங்கப்படும். இக்காலம் திருப்திகரமாக பூர்த்திசெய்யப்பட்டதும், சேவையைத் தொடரவேண்டிய அவசியத்தைக்கருத்திலகொண்டு, பதவிக்கு ஏற்ற உரிய சம்பள விகிதங்கள் நிர்ணயிக்கப்படும்.

''ஆணையாளர், மாநகர சபை, யாழ்ப்பாணம்'' என்ற முகவரிக்கே விண்ணப்பங்கள் அனுப்பப்படல்வேண்டுமேயன்றி தனிப்பட்ட வகையில் கீழ்கையொப்பமிட்டிருப்பவருக்கு அனுப்பப்படலாகாது.

(கட்சன் செல்வராசா)
மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

மாநகர அலுவலகம்,
யாழ்ப்பாணம்.
10-2-1968.

மாதிரிவிண்ணப்பப் படிவம்

1. முழுப் பெயர் (தடித்த எழுத்துக்களில்):
2. முகவரி:
3. பிறந்த திகதியும், வயதும்: [பிறப்புச் சான்றிதழின் பிரதி இணைக்கப்படல் வேண்டும்]
4. திருமணமானவரா அல்லது தனியாளா?:
5. கல்வித் தராதரம் [பிரதிகளை மட்டுமே இணைக்கவும்]:
6. பெற்றுள்ள உயர் தொழில் அல்லது தொழில் நுட்பத் தகைமைகள் ஏதும் இருப்பின்: [பிரதிகளை மட்டுமே இணைக்கவும்]:
7. தற்போதைய உத்தியோகமும் அதன் நியமனத் திகதியும்:

இவ்விண்ணப்பத்தில் நான் மேல் தந்துள்ள விபரங்கள் யாவும் உண்மையானவையென்றும், செம்மையானவையென்றும் உறுதிப்படுத்துகின்றேன்.

.....................
விண்ணப்பகாரர்
கையொப்பம்.

திகதி:....... 446

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதினாறு மணிநேரம் தொடர்ந்து கடும் சமர்

# அமெரிக்க காவல் தளம் கெயி-ஸாங் மீது வட வியட்நாம் துருப்புகள் கடும் தாக்குதல்

## சைகோன் அதிர்ச்சியிலிருந்து இன்னமும் மீளவில்லை

லண்டன், பெப். 10

வியட்நாமில் பன்னிரண்டாவது நாளாக தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கும் கடும் சமர் இப்போது உச்சக்கட்டத்தை அடைந்துள்ளது. தென்வியட்நாமில் அமெரிக்காவின் முக்கிய காவல்தளமான கெயிஸாங் மீது வியட்காங்கியர் தொடர்ந்து பதினாறுமணி நேரம் கடும் தாக்குதல் நடத்தினார்கள். இந்தத் தாக்குதல் தரையிலிருந்து நடாத்தப்பட்டது. கெயி ஸாங் தளத்தை வியட்காங்கியர் இப்போது சுற்றிவளைத்துக்கொண்டிருப்பதாகச் செய்திகள் கிடைத்துள்ளன.

கெயிஸாங் தளத்துக்கு தென்மேற்கே வடவியட்நாம் டாங்கிகள் ஊர்ந்து வந்து கொண்டிருப்பதாகவும், அவர்கள் திறமையாகப் போரைக் கையாண்டதாகவும் செய்திகள் கூறுகின்றன.

தென்வியட்நாமின் தலைநகரான சைகோனும் மற்றும் சில முக்கிய பகுதிகளும நேற்று செயலற்றுக் கிடந்தன. வியட்காங்கியர் நடாத்திய தாக்குதல் அதிர்ச்சியிலிருந்து சைகோன் நகரம் இன்னும் மீளவில்லை.

அமெரிக்க தகவல் தளமான கெயிஸாங்மீது நடாத்தப்படும் தாக்குதலிலிருந்து தப்பிக்கொள்வதற்கு அமெரிக்கா அணு ஆயுதத்தை உபயோகிக்குமென்ற செய்தியை அமெரிக்கா மறுத்துள்ளது. நேற்று திரு ஜோன்ஸன் இந்தச் செய்தியை வெள்ளைமாளிகையிலிருந்து மறுத்து அறிக்கையொன்றை வெளியிட்டார்.

கெயிஸாங்மீது வடவியட்நாம் துருப்புக்கள் நடாத்திய தாக்குதலின்போது 100 வடவியட்நாம் துருப்புக்கள் கொல்லப்பட்டதாகவும் அமெரிக்க கடற்படைத் தளத்தைச்சேர்ந்த 21 பேர் மாண்டதாகவும், 30 பேர் பலத்த காயத்துக்குள்ளானதாகவும் அறிவிக்கப்பட்டது.

## “போரை விஸ்தரிக்க வேண்டாம்”

### அமெரிக்காவுக்கு ரஷ்யா எச்சரிக்கை

மாஸ்கோ, பெப். 10

வடவியட்நாமில் போரை விஸ்தரிக்கவேண்டாமென்று சோவியத்யூனியன் அமெரிக்காவுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளது.

அமெரிக்கா குண்டு வீசுவதில்லையென்ற கட்டுப்பாட்டுக்குள்ளான வடவியட்நாமின் முக்கிய நகரங்களான ஹனோய், ஹைபாங் மீது அமெரிக்கா மீண்டும் குண்டு வீச்சை நடாத்த முடிவு செய்திருப்பதாகக்கிடைத்த ஒரு செய்தியை சோவியத் யூனியன் குறிப்பிட்டு, இம்முடிவு பெருத்த விளைவுகளை ஏற்படுத்துமென்று, ஆகவே இம்முடிவை அமெரிக்கா கைவிடவேண்டுமென்றும் சோவியத்யூனியன் கேட்டுக்கொண்டுள்ளது.

சோவியத்தின் செய்தி ஸ்தாபனமான ‘டாஸ்’ மேற்கண்ட எச்சரிக்கையைவிடுத்தது. வடக்குவியட்நாம் அமெரிக்காவுக்கு நேற்று முன்தினம் விடுத்த அமைதிப் பேச்சுவார்த்தைக் கோரிக்கையை அமெரிக்கா ஏற்றுக்கொள்வது, அதற்கே நன்மையளிக்குமென்று ‘டாஸ்’ மேலும் குறிப்பிட்டுள்ளது.

## ஜோன்ஸனின் கொள்கைக்கு வில்சன் பூரண ஆதரவு

வாஷிங்டன், பெப் 10

வியட்நாம் யுத்தத்தில் அமெரிக்க ஜனாதிபதி ஜோன்ஸன் கைக்கொண்டுள்ள கொள்கைக்குபிரிட்டிஷ் பிரதமர்திரு வில்சன் பூரண ஆதரவு தெரிவித்துள்ளார்.



தற்போது அமெரிக்காவுக்கு விஜயம் மேற்கொண்டுள்ள திரு. வில்சன் நேற்று அமெரிக்க ஜனாதிபதி அளித்த அரசாங்க விருந்தொன்றில் கலந்துகொண்டு உரையாற்றினார்.

திரு ஜோன்சன் வியட்நாம் யுத்தத்தில் கொண்டுள்ள கொள்கைகளைப் பாராட்டிய திரு. வில்சன், இப்போது தென்வியட்நாமில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் கடும்போர் சம்பந்தமான விஷயங்களில் நடவடிக்கைகளை மேற்கொள்ளும்போது நிதானத்துடனும் எச்சரிக்கையுடனும் அமெரிக்கா நடந்து கொள்ளவேண்டுமென்றார் நேற்று திரு வில்சன் நியூயோர்க் சென்றார்.

### அமெரிக்கயோசனை

வடவியட்நாம் வெளிபுறவு மந்திரியின் பேச்சுவார்த்தைக்கான அழைப்புக் குறித்து அமெரிக்க பாதுகாப்பு இலாகா ஆராய்ந்து வருகிறது. வடவியட்நாமில் நிபந்தனையின்றி அமெரிக்கா குண்டுவீச்சை நிறுத்தினால் தாம் பேச்சுவார்த்தைக்குத் தயாராகவிருப்பதாக வெளியுறவு மந்திரி மீண்டும் அறிவித்திருந்தார்.

உண்மையாக வடவியட்நாம் அமைதித்தீர்வை விரும்புகிறதா என்று அமெரிக்க பாதுகாப்பு இலாகா ஆலோசனையின்போது சந்தேகம் தெரிவிக்கப்பட்டது.

### ஈழம் வரும் பிரிட்டிஷ் நிபுணர்

கொழும்பு, பெப். 8

பிரிட்டிஷ் மின்சார பொறியியல் நிபுணர் ஒருவர் இலங்கைக்கு வரவிருக்கிறார். கொழும்பிலுள்ள தொழில் நுட்ப கல்லூரியின் சர்வதேச திட்டக் குழுவில் இரண்டு வருட காலம் வரை ஆலோசகராக இவர் கடமையாற்றுவார்.

இவர் தான் திரு நொரிஸ் லீடர். இவர் உறம்பயர் நகரிலுள்ள பால்பரோ தொழில் நுட்ப கல்லூரியின் பொறியியல் போதனைப் பீடத் தலைவராவார். பிரிட்டிஷ் வெளிநாட்டு அபிவிருத்தி அமைச்சின் ஆதரவின்கீழ் இவர் இலங்கையில் இந்த நியமனத்தைப் பெற்றிருக்கிறார்.

கொழும்பு தொழில் நுட்பக் கல்லூரியில் தமது [illegible] திட்டத்தை [illegible] திரு [illegible] விரிவுரைகளையும் நிகழ்த்தி வருவார்.

வேவுக்கப்பல் விவகாரம்

## ‘ஆழ்கடலில் வைத்து கைப்பற்ற வில்லை’

— வட கொரியா

லண்டன், பெப் 10

ஆழ்கடலில் வைத்தே தமது வேவுக கப்பலான ‘பியூபுலோ’ கைப்பற்றப்பட்டதென்ற அமெரிக்காவின் கூற்றை வடகொரியா மறுத்துள்ளது.

வடகொரியா 83 மாலுமிகளுடன் பிடித்துவைத்திருக்கும் அமெரிக்காவின் வேவுக்கப்பலான ‘பியூபுலோ விவகாரத்தை விடுவிப்பதற்கான எவ்வித முயற்சிகளும் பலனளிக்காமல் தோல்வி கண்டு கொண்டிருப்பதாக அறிவிக்கப்பட்டது.

வடகொரியாவின் கடல் பிராந்தியத்துக்குள் வைத்தே ‘பியூபுலோ’ பிடிக்கப்பட்டதாக வடகொரியா தெரிவித்துள்ளது.

ஆயினும் வடகொரியா ஆழ்கடலில் வைத்தே பியூபுலோவை கைப்பற்றியது என்பதை அமெரிக்கா ஆதாரபூர்வத்துடன் நிருபிக்கத்தயாராக இருக்கின்றதென்று அமெரிக்க அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

## வளரும் நாடுகளின் ஏற்றுமதிப் பிரச்னை

புதுடில்லி, பெப் 10

அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளுக்குள்ள ஏற்றுமதிப்பிரச்னைகள் குறித்து நேற்று இங்குநடைபெறும் ஐ.நா. வின் 2-வது வர்த்தக அபிவிருத்தி மகாநாட்டில் குறைதெரிவிக்கப்பட்டது.

ஏற்றுமதிக்கான கப்பல் கட்டணங்கள் அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளுக்கு பெரும் கஷ்டத்தை ஏற்படுத்துகிறதென்றும், ஐரோப்பிய கப்பல் கம்பனிகள் இதுவிஷயத்தில் நியாயமற்ற முறையில் நடந்து கொள்கின்றனவென்றும் சிலபிரதிநிதிகள் கண்டனம் தெரிவித்தனர்.

நேற்றைய மகாநாட்டில் உலக வங்கித் தலைவர், ஐ. நா. பொதுக்காரியதரிசி யுதாண்ட் ஆகியோர் உரைநிகழ்த்தினர்.



### யுதாண்ட் முயற்சி

புதுடில்லி பெப். 10

வியட்நாம் யுத்தத்தை ஒரு முடிவுக்குக் கொண்டு வருவதற்கான முழு முயற்சியில் ஐ நா பொதுக்காரியதரிசி திரு. யுதாண்ட் இங்கு ஈடுபட்டுள்ளார்.

அமெரிக்க தூதுவருடனும், வடவியட்நாம் தூதுவருடனும் ஐ நா பொதுக்காரியதரிசி திரு யுதாண்ட் பேச்சு வார்த்தை நடத்தினார்.

பிரதமர்ஸ்ரீமதி இந்திராகாந்தியுடனும வியட்நாம் பிரச்னைகுறித்து பேச்சு வார்த்தை நடத்தியுள்ளார்

### தேர்தல் நடத்துக

லக்னோ, பெப் 10

உத்தரப் பிரதேசத்தில் இடைக்காலத் தேர்தல் ஒன்றை நடத்தும்படி உ. பி. முதன் மந்திரிசபை கேட்டுக்கொண்டது ஆயினும் உ. பி. மந்திரி தமது ராஜினாமாக்கடிதத்தை இதுவரை சமர்பிக்கவில்லை

### பிரிட்டனில் பயிலும் ஈழத்து சட்ட நிபுணர்

லண்டன், பெப் 10

இலங்கைப் பாராளுமன்ற சட்டத் தயாரிப்பாளரான திரு. ஜி. ஏ. தவத்துரை தற்சமயம்பிரிட்டனில்நடைபெற்றுவரும் விசேஷ பயிற்சி வகுப்புகளில் பங்குபற்றிவருகிறார்

ஐந்து மாதங்கள் வரையிலான இந்தப்பயிற்சி வகுப்புகளை பிரிட்டிஷ் வெளிநாட்டு அபிவிருத்தி அமைச்சும், பிரிட்டிஷ் கவுன்சிலுமாக ஒழுங்குசெய்திருக்கின்றன வெஸ்மினிஸ்டரிலுள்ள சென் ஸ்டீபன் மாளிகையில் இப்பயிற்சி வகுப்புகள் நடைபெற்று வருகின்றன 20சாம்ராஜ்ய நாடுகளைச்சேர்ந்த சட்டநிபுணர்கள் இப்பயிற்சி வகுப்புகளில் பங்குபற்றிவருகிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

சர்வதேச சட்டம், சாம்ராஜ் சட்டம், கடல திக்கட்டம், ஒப்பந்தம தயாரித்தல், சட்டம் தயாரித்தல் போன்ற துறையில் விரிவுரைகள் நிகழ்த்தப்பட்டு வருவதாகவும இவை மிகவும் பயன்மிக்கவையென்றும் திரு. தவத்துரை கூறினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணிவாக்கு

நாம் என்ன செய்தாலும், அது இறைவன் நமக்கு அளித்த சக்தியால் தான் செய்தோம் என்பதை உணரவேண்டும். எல்லாவற்றுக்கும் எங்கும் நிறைந்த திருவருளே காரணம் என்ற உணர்ச்சி ஏற்படும்போதே மன அமைதியும் சாத்தியமாகும்.

—சுவாமி ராமதாஸ்


# ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegram: EELANADU Jaffna
Post Box: 49 Jaffna
Telephone: 389

யாழ்ப்பாணம் பிலவங்கஷூ தை மீ 28உ (11-2-68)


## பத்தாவது ஆண்டு

உங்கள் அபிமான பத்திரிகையான 'ஈழநாடு'க்கு இன்று பத்தாவது ஆண்டு பிறக்கின்றது. மகிழ்ச்சியான இந்த சமயத்தில், இதை இதுகாறும் ஆதரித்து வளர்த்து வந்துள்ள அனைவருக்கும் நமது நன்றியறிதலைத் தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

ஈழத்திலே தலைநகரான கொழும்புக்கு வெளியிலிருந்து பிரசுரமாகும் தினசரிப்பத்திரிகை 'ஈழநாடு' ஒன்றுதான். தமிழ்ப் பகுதியின் தலைநகரென்று கருதப்படும் யாழ்ப்பாணத்திலிருந்து ஒரு தினசரிப்பத்திரிகையை நடத்துவது எளிதல்லவென்பது பலருக்தும் தெரியும். பல பல வசதியீனங்கள். என்றாலும் தமிழ்ப்பேசும் மக்களுக்குத் தொண்டுசெய்ய வேண்டுமென்ற ஒரே ஆர்வத்தில், இதை ஆரம்பித்த, தொடர்ந்துநடத்திவருவது ஓர் ஆச்சரியமே

சென்ற ஒன்பதுஆண்டுகளில் 'ஈழநாடு'க்கு ஏற்பட்ட சோதனைகள் கொஞ்சமன்று. டாக்டர் சண்முகரத்தினத்தாரின் மறைவு, இந்த ஸ்தாபனத்துக்கு ஏற்பட்ட ஒரு பேரிடி. அதையும் மற்றும் பல பல சோதனைகளையும் சமாளித்து, ஒரு நாள் தவருமல் 'ஈழநாடு'பத்திரிகையை பிரசுரித்து வர முடிந்துள்ளதெனில் இதற்கு தோன்ருத்துணையாக இறையருள் இருந்து வந்துள்ளதென்பதில் ஐயமில்லை. இதுவரை எமக்குத் துணைநின்றுள்ளசக்தி மேலும் துணைசெய்து பத்திரிகையைக்காத்து,வளர்த்து, இதன்மூலம் மேலும் பல நல்ல பணிகளை மக்களுக்குச் செய்யுமாறு உதவுமென்பதே எமது திட நம்பிக்கை.

உலகிலே பத்திரிகைத் தொழில் பெரிதும் முன்னேறி வருகின்றது. அத்துடன் ஒப்பிடுகையில், 'ஈழநாடு' சற்றும் எதிர் நிற்க முடியாது. போட்டிகளோ மிக அதிகம். என்ருலும் நமது வாசக நேயர்கள் இதன்பால் விசேஷ அபிமானம் காட்டி இது தங்கள் குழந்தை என்ற உணர்ச்சியில், குறைகளைப்பொருட்படுத்தாது ஆதரித்து வருகின்ருர்கள்.

செலவுகள் நாளுக்கு நாள் கூடுகின்றன. என்ருலும் கூடுமானவரை பத்திரிகையில் அபிவிருத்தி செய்யவும், நடுநிலைமை காத்துமக்களுக்குமேலான தொண்டாற்றவும் முயற்சிகளைச் செய்து வருகிறோம். மக்களின் அபிமானமும் ஆதரவும் எங்களுக்கு நம்பிக்கையும், உற்சாகமும் அளிக்கின்றது. 'ஈழநாடு' ஊழியர்களும், இவ்விஷயமாகச் செய்யும் தியாகசேவையும் ஊட்டும் ஒத்துழைப்பும் நன்றியுடன் குறிப்பிடத்தக்கதாகும். எதிர்காலம் மிக மேலாக இருக்குமென்றும் மக்களுக்கு மேலும் அதிக பணிகளைச் சிறப்பாக செய்யமுடியுமென்றும் தனது பத்தாவது ஆண்டில் 'ஈழநாடு' நம்பிக்கையுடனும் ஆர்வத்துடனும் தனனை பணிவுடன் அர்ப்பணித்துக் கொள்ளுகின்றது.

## சங்கானைச் சம்பவம்

சங்கானையில் சென்ற சில தினங்களாக நடந்து வந்த சம்பவங்களும் சென்ற வியாழக்கிழமை மாலை அங்கு நடந்த பிரேத ஊர்வலம் ஒன்றில் நடைபெற்ற துப்பாக்கிப் பிரயோகச் சம்பவமும் நாட்டின் அமைதியை விரும்பும் எவருக்கும் நிச்சயம் கவலையளிக்கும்.

சங்கானையில் சமூக உறவு சீர்குலைந்து கொந்தளிப்பான நிலைமை ஏத்பட்டபோது அதைச்சமாளித்து மக்களுக்கிடையில் நல்லுறவை ஏற்படுத்த வடபகுதி பொலிஸ் அதிபர் திரு. ஆர். சுந்தரலிங்கமும் மற்றும் பலரும் முயற்சி செய்து சமாதானசபைகளைக்கூட அமைத்தனர். ஆயினும் இந்த முயற்சி வெற்றியளிக்கத் தவறிவிட்டது. இது கவலைக்குரியது. ஆனாலும் நிலைமை கொந்தளிப்பாக இருப்பதை அறிந்தும் சென்ற வியாழக்கிழமை பிரேத ஊர்வலத்துக்கு அனுமதியளித்ததும், பிரேத ஊர்வலம் செல்ல வேண்டிய பாதையைவிட்டு வேறு பாதையால் சென்ற பொழுது அதைத் தடுக்கத் தவறியதும் பிரேத ஊர்வலத்தின்போது பொலிசார் தகுந்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யத் தவறியதும் ஏன் என்பது விளங்கவில்லை.

இப்பொழுது அங்கு மாலை முதல் காலைவரை ஊரடங்கு உத்தரவுபிறப்பிககப்பட்டிருப்பதுடன் தற்காலிக பொலிஸ் நிலையங்கள் திறக்கப்பட்டுத் தகுந்த நடவடிக்கைகள் எடுத்திருப்பதும் அங்கு நிலைமை கட்டுக்கடங்கி இருப்பதும் ஆறுதலளிக்கிறது மக்களுக்கிடையில் நல்லுறவை ஏற்படுத்தவும் அங்கு நிரந்தர அமைதியை நிலைநாட்டவும் அங்குள்ள மக்கள் அச்சமும் கவலையுமின்றி தங்களது அன்ருட அலுவல்களைக் கவனிக்கவும் அரசாங்க அதிகாரிகளும் சமயசமூகத் தொண்டர்களும் முன்வந்து தொண்டாற்ற வேண்டும்.

இதேசமயம் சென்ற வியாழக்கிழமை நடைபெற்ற துப்பாக்கிப் பிரயோக சம்பவம்பற்றியும் அங்கு சென்ற சில மாதங்களுக்குள் அடிக்கடி நிகழ்ந்த கலவரங்கள்பற்றியும் இவற்றுக்குப் பின்னணியில் விஷமிகள் செயல் ஏதும் இருக்கிறதா என்பதுபற்றியும் ஆராய்ந்து இனியும் இவ்வித துரதிர்ஷ்ட சம்பவங்கள் நடைபெருமல் தடுப்பதற்கு பகிரங்க நீதி விசாரணைக் கமிஷன் ஒன்று விசாரணை நடத்த வேண்டியது அவசியம். நீதிவிசாரணைக்கமிஷன் ஒன்றை பிரதமர் விரைவில் நியமிப்பதுவரவேற்கத்தக் து.

கலவரங்களைத் தூண்டிவிடக்கூடிய முறையில் பொதுமக்களும் சில பத்திரிகைகளும் நடந்து கொள்ளாமலிருக்க வேண்டுமென்பதும் நமது வேண்டுகோளாகும்.

# வாசக நேயர்கள் வாழ்த்துகிருர்கள்

## அறிவையும் தமிழையும் வளர்க்கும் ஏடு

தமிழ்ப் பகுதியிலிருந்து தமிழரை உரிமையாளராகக் கொண்டு தமிழிலே வெளிவரும் 'ஈழநாடு' என்னும் நாளிதழ் பத்தாண்டில் காலடி எடுத்து வைக்கிறது. குழந்தையாக இருந்து குமரியாக வளர்ந்து பருவமுறும் பெண் பிள்ளையின் வளர்ச்சியைக் கண்டு மனம் பூரித்து இருக்கும் தாயின் உள்ளம் போல எம் உள்ளமும் மகிழ்ச்சியால் மலர்கின்றது.

'ஈழநாடு' கூலிகளுக்கும் போலிகளுக்கும் விளம்பரம் கொடுத்ததில்லை. வாணிப நோக்கோடு நடந்து வயிற்றுப் பிழைப்பு நடத்தியதும் கிடையாது. திரைப்படப் பெண்களின் அரைப்படங்களை முழுப்படம் எடுத்து விளம்பரம் செய்தும், நாட்டின் எங்கோ ஒரு மூலையில் நடக்கும் சிற்றின்ப வெறியாட்டங்களைப் பெரிதாகக் காட்டிப் பணஞ் சேர்த்ததும் கிடையாது. அரசியலார்க்கோ அல்லாதார்க்கோ தான் பிடித்துத் தன் கொள்கையிலிருந்தும் தளர்ந்ததும் இல்லை. அதனல் வளர்ந்ததுமில்லை. என்றும் நடுநிலை தவறுது நல்ல செய்திகளையே எடுத்துக் காட்டி, அறிவை வளர்த்ததுடன் தமிழையும் வளர்த்து ஏட்டறம் காத்த 'தமிழ் ஏடு' என்றுபெருமையோடு கூறிக் கொள்கின்ருேம்.

எல்லா வகையிலும் அறிவும், பண்பும், அடக்கமும் மிக்க குழந்தையாகவே வளர்ந்து வந்திருக்கிறது. இனியும பகுத்தறிவையும், பண்பையும் காத்து, தமிழ் மக்கள் உள்ளளவும் உலகம் உள்ளளவும் வாழ வேண்டுமென்று மனமார வாழ்த்துகிருேம்,

இந்நேரத்தில், 'ஈழநாடு' என்னும் தமிழேடு மேலும் புதுப்பொலிவு பெறும்வகையில், அதற்கு ஆக்கமும் ஊக்கமும் அளிக்க வேண்டும் என்று பொதுமக்கள் தமிழர்கள் அனைவரையும் கேட்டுக் கொள்கிறேன்.

வாழ்க தமிழ்!
வளர்க ஈழநாடே!

வி. பரந்தாமன்.
தென்புலோலி,
பருத்தித்துறை

## 'ஈழநாடு' — பத்துவயதுப்பையன்!

ஓ ... நினைக்கவே நெஞ்சம் பூரிக்கிறது! ஈழநாட்டில், யாழ்ப்பாணத்தில் இணைப்பின்றி — வளர்ந்து பத்தாவதாண்டில் கம்பீரமாக நிற்கின்றது என்பதை உணரும்போது ...

நெஞ்சம் குளிர்கின்றது!

அறுசுவையுண்டியின் பின் பாயாசம் அருந்திய திருப்தி விரவுகின்றது!

ஆடம்பரமின்றிச் சலசலப்பின்றி வளர்ந்துவிட்ட இந்த 'ஈழநாட்'டின் வாழ்வுடன் பல எழுத்தாளர்களின் பிரசவக் கதைகளும் செருகிக் கிடக்கின்றன. கற்றறிந்தோரின் அமைதியுடன், பல எழுத்தாளர்களை உருவாக்கும்பணியைப் பூரணத்துவமாக்கி நிற்கின்றது, இது!

ஒருகாலத்தில் வாரப் பத்திரிகையாயிருந்து, கால ஓட்டத்தில் பரிணமித்து இன்று மக்கள் கரங்களில் தினசரியாகப் பரிமளிக்கும் ஈழநாடு நிறுவியிருக்கும் உண்மை சாதாரணமானதல்ல— யாழ்ப்பாணத்திலும் ஒரு தினசரிப்பத்திரிகையை நடத்தமுடியும் என்பதே அது. இந்த உண்மையை இன்று ஒவ்வொரு யாழ்ப்பாணனும் ஜீரணித்து மகிழ்கிருன். ''ஈழநாடு'' ஏட்டை இன்று நாம்பார்க்கிறபோது அங்கே என்ன இருக்கிறது?

... கட்டுப்பாடு இருக்கிறது.

... நிதானம் இருக்கிறது.

... கண்ணியம் இருக்கிறது.

அதேசமயம் ''ஈழநாடு'' ஏட்டினில் இல்லாதவை —

... ... குடுகுடுப்பைக்காரனின் சலசலப்பு இல்லை. விலைமாதின் கவர்ச்சி இல்லை.

இதேசமயம் யாழ்ப்பாண மண்வாசனை கமழும் வறுமையும் இதனைச்சற்று அணுகத்தான் செய்கிறது என்பதை ஒப்புக்கொள்ளவே வேண்டும். இல்லாவிடில் 'ஈழநாட்டி'னில் சித்திர மணம் கமகமக்கும்! அதன் அமைப்பிலே மிளிர்ச்சி ததும்பி வழியும்.

இருந்தாலும் என்ன,நல்ல பையன்விலைகுறைந்த துணியை உடுத்துள்ளான் என்பதற்காக அவனைநாம் ஒதுக்கிவிடுவதில்லையே ... 'ஈழநாடு'ம் அப்படித்தான் ஒரு நல்ல பையன்.

அவனுக்கு வயது பத்து.

இனி அவன் இளமைப் பருவ ஆரம்பமான பதினைந்துவயதை அடையும் போது மேலும் எழிலுடனும், மினுமினுப்புடனும் திகழ்வானென நாம் எதிர் பார்க்கலாம். இளமைப்பருவத்தில் மிடுக்குத் தெரிவது இயல்புதானே!

க. இந்திரலிங்கம்

## வாழ்க; வளர்க

தமிழ் மொழிக்கும் தமிழ் இனத்துக்கும் துன்பம் நேர்ந்துள்ள இக்காலத்தில் தொல்லையை நீக்க, துன்பத்தைத் துடைக்க 'ஈழநாடு' ... பணி ஆளப் ... அதன் வளர்ச்சி கண்டு அகமகிழ்கிறேன்.

'ஈழநாடு' பத்திரிகை இன்று பத்தாவது வ[யதி]ல் கால் எடுத்து வைக்கிறது. வாசகநேயர்கள் பலர் வாழ்த்தும் ஆசியும் தெரிவித்துள்ளார்கள் அத்தனையையும் இங்குவெளியிட இடவசதி இல்லை ஒரு சில மட்டும் இன்று வெளியிடப்படுகிறது அன்பர்கள் அனைவருக்கும் நமது உளம் நிறைந்த நன்றி.

## குறைந்த தொகையில் நிறைந்த அறிவு

உதட்டளவில் அல்லாது உருவத்தில் சிறிதெனினும் உள்ளத்தில் பரந்த கருத்துக்கள் பல கொண்ட பத்திரிகையாம் ஈழநாட்டுக்கு எமதுள்ளம் கனிந்த நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கிருேம். வாசகர்களைக் கவரும் வண்ணத்தில் அமையும் தலைப்புகளும், விசேஷமாக ஐயாறனின் கருத்தும் என்றும் எவராலும் போற்றப்படவேண்டியவை. மூன்ரும் பக்கத்தில் வெளிநாட்டுச் செய்திகளை வெளியாக்குவது மேற்படி பத்திரிகையின் தனிப்பாணியென்றே கூறலாம். குறைந்த தொகையில் நிறைந்த அறிவை ஈழம் வாழ் மக்கள் குறிப்பாகத் தமிழர் அறியத் தந்துதவும் பத்திரிகையெனில் அது ஈழநாட்டையே சாரும். ஆகவே எமதூர் மக்கள் சார்பிலும், தோழர்கள் சார்பிலும் தங்கள் பத்திரிகையின் பத்தாவது ஆண்டு நிறைவு விழாவைப்போல மேலும் பல பத்தாவது விழாக்களைக் கொண்டாட வேண்டுமென வாழ்த்துகின்றேன்.

இ. ஸ்ரீகந்தவேள்,
நயினுதிவு-2.

## போட்டி வேண்[டும்]

ஈழத்து தமிழன்பர்க[ள் ...] நான் மலர் 'ஈழநாடு' [...] விடையே பிறந்து, மலர் [...] குறுகிய காலத்தில் [...] மளவு அறிவைத் தந்து [...] மையும் அறிவோடு வ[...] த்து, தானும் நற்பெயர் [...] பில் வெற்றிநடைபோ[...] இப்போது பத்தாவது ஆ[ண்] டில் காலடி எடுத்து [...] கும்போது கோடானுகோ[டி] யாக வந்து குவியும் வா[ழ்த்]துக்களோடு என் வா[ழ்த்]துக்களையும் தெரிவிப்ப[தில்] மகிழ்ச்சியுறுகிறேன்.

அளப்பரிய பணி புரி[...] ஈழநாட்டுக்குத் தமிழ் ம[க்க]ளாய நாம் தலைவணங்[க]தான் வேண்டும்.

ஈழநாடு சிறப்பாக இய[ங்கி] வருகின்ற வேளையில் [...]னும் ஒரு சிறு விஷயத்[...] அது தன் கவனத்தி[ல்] எடுத்துக்கொள்ள வேண்[டு]மென்பது என் அவா. [...] கதை, கவிதை விஷய[...]வில் ஆர்வம் கொண்டுள்[ள] எமக்குப் பத்தாண்[டு] வளர்ந்து வலிமைபெற்[றி]ருக்கும் ஈழநாடு, போட்[டி] நிகழ்ச்சிகளை அதிகம[ாக] ஏற்படுத்தவேண்டும்.

ஈழநாட்டின் பத்தாண்டு [...] பருவம் விரைந்து இ[ருப]தாகி, முப்பதாகி..., [...]ருண்டுவிழாக்களை எண்[...]கணக்கின்றிக் கொண்டா[டி] மகிழ மீண்டும் என் வாழ்[த்]துக்கள்.

நளாயினி வைத்திலிங்[கம்]
பருத்தித்துறை.

## பெருமைப்படக்காரணம் ஒன்ரு, இரண்டா?

யாழ்ப்பாணத்திலே நாள் தோறும் மலரும் ஈழநாட்டால் தமிழ்ப்பேசும் மக்கள் பிரதானமாய் ஈழத்து மக்கள் பெருமையடைவதற்கு காரணங்கள் பல:-

அ. ஏழைகட்கும் கிடைக்கக்கூடிய சகாயவிலை.

ஆ. பட்சபாதமின்றியும் கட்சிபேதமின்றியும் ஆசிரியர் கருத்துக்களை வெளியிடல்.

இ. தமிழ் பேசும் பாராளுமன்ற உறுப்பினர்கள் சிக்குப்பட்டுத் தமிழுக்கும் தமிழினத்திற்கும் என்ன நிகழுமோவென்னும் அவலநிலையில், அவர்கள் (பா. உ.) எப்படியாக நடந்திருக்க வேண்டும், எனிமேலாவது எப்படி நடக்கவேண்டும் என்பதை வாசித்துவாசித்து மகிழ்ச்சியடைந்ததிலெ ாருவன் யான்.

ஈ. இந்தப் பத்திரிகையில் வரும் உரைநடை சகலதையும் இந்நாட்டில் வெளிவரும் பத்திரிகைகளுடனே அல்லது பிறநாட்டிலிருந்து வரும் பத்திரிகைகளுடனே ஒப்பிடின் எம் 'ஈழநா[ட்டின்]' தரத்தில் எவ்விதத்[தி]லு[ம்] குறைவில்லை என்பது என்[னு]டைய மதிப்புமன்றி என்[னு]டன் கலந்துபேசிய பல[ரி]ன் உத்தேசமுமாகும்.

உ. 'கண்டெடுக்கப்பட்டது', 'இப்பொருள் யா[ரு]டையது' என்னும் தலைய[ங்]கம் இந்நாட்டிற்கு இன்[றி]யமையாதது மேலும்சென்[ற] மார்கழி மாதம் க.பொ.[த.] பரீட்சை 'மாதிரிவினவிடை' மாணவர்கட்குப் பேருத[வி]யாயிருந்தது.

ஊ. ஐயாறன் எழுது[ம்] உரையைப்படிக்க என[க்கு] கோரவா.

இப்பத்திரிகை எம் நாட்டிற்கு ஆற்றும் தொண்டை விரித்துரைக்க எனக்குச் சொல்வன்மை போதாது. இப்பத்திரிகை, தமிழ்பேசும் மக்களின் மதிப்பை மேன்மேலும் பெற்று தழைத்து, ஓங்கிவளர்ந்து, எம் தமிழ்த்தாய்க்கு ''ஈன்றபொழுதின் பெரிதுவக்கும் தன் மகனைச் சான்ருேனெனக்கேட்டதாய்'' என்னும் திருவள்ளுவர் வாக்குக்கிணங்க இன்பமூட்டும் என்பதில் எட்டுணையேனும் ஐயமில்லை. சுபம்.

வாழ்க 'ஈழநாடு' நீடூழி.

பொ. ஞானசவுா.
வைதடி.

வாழ்க ஈழநாடு, வளர்க அதன் பணி.

ஜே. எம். ஜேசுதாசன்,
வெஞ்சர் குரூப்,
தோர்லூட்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ...கள்; போற்றுகிறார்கள்; யோசனை கூறுகிறார்கள்

...வது வய
...நேயர்கள்
...ளார்கள்.
...தி இல்லை.
...படுகிறது.
... நிறைந்த

## ...வேண்டும்

...மிழன்பர்களின்
...ஈழநாடு' மக்க
...ந்து, மலர்ந்து
...த்தில் பெரு
...வத் தந்து எம்
...வோடு வளர்
...ற்ஏறப்பாதை
...நடைபோட்டு
...த்தாவது ஆண்
... எடுத்துவைக்
...காடானுவோடி
...ருவியும் வாழ்த்
... என் வாழ்தி
... தெரிவிப்பதில்
...கிறேன்.

... பணி புரியும்
...த்த் தமிழ் மக்க
... தலைவணங்கத்
...டும்.

...மப்பாக இயங்கி
...வேளையில் இன்
...சிறு விஷயத்தை
... கவனத்திற்கு
...ாள்ள வேண்டு
...ான் அவா. சிறு
...தை விஷயங்க
...ம் கொண்டுள்ள
...பத்தாண்டு
... வலிமைபெற்றி
...நாடு, போட்டி
...ா அதிகமாக
...வேண்டும்.

...டின் பத்தாண்டுப்
...ிரைந்து இருப
...ப்பதாகி..., நூற்
...ாக்களை எண்ணுக்
...றிக் கொண்டாடி
...டும் என் வாழ்த்

...ி வைத்திலிங்கம்
...துறை.

## ...ாரணம்
## ...டா?

... எம் 'ஈழநாடு'
... எவ்விதத்திலும்
...ை என்பது என்னு
...திப்புமன்றி என்னு
...லந்துபேசிய பலரின்
...ழமாகும்.

...' கண்டெடுக்கப்பட்
...இப்பொருள் யாரு
... என்னும் தலையங்
...நாட்டிற்கு இன்றி
...து மேலும்சென்ற
... மாதம் க,பொ,த.
... 'மாதிரிவினவிடை'
...கட்குப் பேருதவி
...தது.

...யாறன் எழுதும்
...ப்படிக்க எனக்
...

...திரிகை எம் நாட்
...ற்றும் தொண்டை
...ரக்க எனக்குச்
...மை போதாது.
...ிகை, தமிழ்பேசும்
... மதிப்பை மேன்
... பெற்று தழைத்து,
...ர்ந்து, எம் தமிழ்த்
... ''ஈன்றபொழுதில்
...க்கும் தன் மகனை
...னெக்கேட்டதாய்''
... திருவள்ளுவர் வாக்
...க்க இப்பழுட்டு ம
... எட்டுணையேனும்
...யமில்லை. சுபம்.
...'ஈழநாடு' நீடூழி.
... பொ. ...ராசையா
...

## நன்றி

'ஈழநாடு' வளர்ச்சி கண்டு பெருமிதம் கொள்கிறேன்.

நான் ஒரு மாணவன். சென்ற ஆண்டில் நடந்த பொதுத் தராதரப்பத்திரப் பரீட்சைக்குத் தோற்றினேன். ஈழநாடு பத்திரிகை பிரசுரித்த 'அ' பாடத்திட்ட மாதிரி வினா விடைகள் எனக்குப் பெரிதும் உதவியாக இருந்தன என்னைப் போல் இதர பல மாணவர்களும் பயனடைந்திருப்பார்கள். மாணவ உலகம் சார்பாக ஈழநாட்டுக்கு எமது நன்றி. மேலும் நீடூழி வாழ வாழ்த்துகிறேன்.

என். எம். ஹனிபா,
ஏறாவூர்-3.

## ஈழநாட்டின் நடுநிலைமை

இன்றும் கந்தோருக்குப் போய்வருகின்றீரா? என்று ஓர் அன்பர் என்னைக்கேட்டார். 'நான் கந்தோருக்குப் போகவில்லை போயாநாளாகையால் எல்லோரைப்போலவும் நானும் வீட்டில்தான் ஆனால் வழக்கமாக வாசிக்க வேண்டிய எங்கள் ஈழநாட்டுப் பத்திரிகை இராஜேஸ்வரி கபேக்கு வருவது. அதை எடுப்பதற்காகப் போய்வருகின்றேன். என்றேன். தமிழ்தெரியாதவேறு ஓர் அன்பர் 'அதுஎன்ன தமிழரசுக்கட்சிப் பத்திரிகையா அல்லது தமிழ்காங்கிரஸ்கட்சியின் குழந்தையா?' என்று மிகவும் அவசரமாகக் கேட்டார். அவர் கேட்டதில் ஒரு பிழையுமில்லை. இப்போது பத்திரிகைகள் தர்மவழியில் நின்று உளைக்கத்தெரியாமல் திண்டாடும்போது பத்துச் சதத்தில் பத்திபத்தியாக எழுதி பத்திரிகையின் தர்ம அக்கும் பங்கம் வராது பாரபக்சமற்ற முறையில் உழைக்கும் ஒரேஒரு பத்திரிகை எங்கள் 'ஈழநாடு' தான் என்று கூறி கையில் உள்ள பத்திரிகையை காட்டினேன், 'Netional tamil Daily' என்று ஆங்கிலத்தில் எழுதியிருப்பதனை மூன்று நான்கு தரம் வாசித்தார். அதனை முணுமுணுத்தார் பின்னர் பத்திரிகையென்றால் அந்தபடித்தான் இருக்க வேண்டும் என்றார்.

ஈழநாட்டின் நடு நிலைமையை யாழ்ப்பாண அரசாங்க அதிபரும் அறிந்து பாராட்டியுள்ளார் என்றதனை அறிந்தபோது உண்மையில் கொழும்பில் இருக்கும் அத்தனை தமிழ் நெஞ்சுகளும் ஒருமுறை ஈழநாட்டையும் பத்திராதிபரையும் வணங்குவார்கள்.

'நாடும் நடப்பும்' ஐயாறன்' இவை எல்லாம் கந்தோரால்வந்து களைப்புற்று இருக்கும் எங்களுக்கு ஒரு உல்லாசப் பிரயாணமும் ஆலயவழிபாடும் போன்றதாக இருக்கின்றது. பிரதானமாக ஒவ்வொரு ஐயாறன் முடிவிலும் தேவாரம் ஒன்று இருப்பது ஐயோ! எம்மை வாழ்விக்கவந்த குருவோ! என்று கண்ணீர் மல்க வாழ்த்துகின்றோம்.

ஈழநாடு வாழ்க!

அதன் தொண்டுபெருகுக!

ம. சி. சிதம்பரப்பிள்ளை
கொழும்பு-2

## மணிக் கல்

— இளம்பரணன் —

இரவி எழுந்தனன், இருள் அகன்றது,
உலகு புரக்க என்[று] ஒளி பரப்பிட,-
அலகிலா எழில் ஆழ்ந்த நற்றமிழ்,
நிலவு செந்தமிழ், தெறிய நாகித்தன்
உலகிற் செய்திகள் உடன் அளித்[து] எமக்[கு]
உள்ளே போதனை, உரை இலக்கியம்,
கலைவலார் பலர் ஆக்கமும் பல,
காணும் சொற்சுவைக் கவிதை, கட்டுரை
இவையெலாம் கொண்டு எழுந்தனை! இங்கு
'ஈழநா[டு]' எனும் பெருமை பெற்றிட,
அடி எடுத்து வைத்[து] ஆறு மூன்றொடு,
ஆகும் ஆண்டுகள் ஆகி எம்மிடை,
பண்களுக்குளே ஒன்பதென்பது
எண்ணிலே அது மணிக்கல், வாழ்விலே!
எட்டி வைத்து கால் எடுத்து வைத்தின்னும்
ஏற்றம் பெற்றிட மீட்டும் மீட்டுமே
பெருமை யோடுநீ பெயர்த்து வைத்தின்னும்
புத்தம் புதிய நற் பத்தாம் ஆண்டிலே
பொலிவு பெற்றின்றும் புகழ் பரப்பிட
காலம் காட்டும் ஓர் 'ஆடி' ஆகிநீ!
பத்தி, பண்பு, அறம் பரவ அறிவுரை
சித்தம் குழைக்கு[ம்] நற் தேன் கவிதைகள்,
கற்றவர் தரும் கருத்துரைகளும்,-
இத்தனை கொண்டு எங்கரங்களில்
என்றுமே வாழி! 'ஈழநாடு' நீ!

'ஆடி' - கண்ணாடி.

## 'ஈழநாடு' வளர ...

'ஈழநாடு' ஒரு தசாப்தம், அதனுடைய சேவைகள் பற்றியும் அதனுடைய எதிர்கால வளர்ச்சிக்கான ஊட்டங்கள் பற்றியும் ஒரு சில வார்த்தைகள் சொல்லுவதற்கு 'ஈழநாடு' பத்திரிகையின் அபிமான வாசகன் என்ற ஹோதாவில் எனக்கு உரிமையுண்டு என நம்புகிறேன்.

'ஈழநாடு' அதனது குறுகிய கால சேவையின் போது வேறுஎந்தப் பத்திரிகைகளையும் விட செய்திகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கும் பத்திரிகை அதுதான் என்பதை நிருபித்து விட்டது. வேறுபத்திரிகைகள் விளம்பரங்களிலும், புகைப்படங்களிலும் தங்கள் பக்கங்களை நிரப்பி 'வியாபாரம்' பண்ணும்போது, 'ஈழநாடு' தனது பக்கங்களை சூடான செய்திகளாயே நிரப்பி வாசகரின் உள்ளத்தையும் நிரப்பிவந்துள்ளது. வடபிராந்தியச் செய்திகளாயினும்சரி, தலைநகர்செய்திகளாயினும்சரி, அயல் நாட்டுச் செய்திகளாயினும்சரி எதனையும்இயன்றளவு விரைவுடன் வாசகர்களுக்கு அளித்து வந்துள்ளது கோகிலாம்பாள் கொலை வழக்கு போன்ற சுவையான வழக்குகள். சமூகஏற்றத் தாழ்வு ஒழிப்பு போன்ற சமூக முன்னேற்றத்துக்கு உதவக்கூடிய விஷயங்கள், மாவட்டசபை கருத்தரங்கு போன்றபயனுள்ள அரசியல் பிரச்னைகள் ஆகியன சம்பந்தப்பட்டவரையில் 'ஈழநாடு' ஆற்றிய தொண்டு மகத்தானது. ஐயாறன்பத்தியும், ஆசிரியர் தலையங்கமும் தரமான அம்சங்களாய்த் திகழ்கின்றன,

'ஈழநாடு' வாரமலரைப் பொறுத்தளவில், நடுநிலைமையுடனான அரசியல் விமர்னம், உலகமேடை', அ.செ.மு.வின் கைவண்ணங்கள் ஆகியன மறக்க முடியாதவை ஆரம்பத்தில் தரமான சிறுகதைகள் பிரசுரித்து வந்தவர்கள் பின்னர் அத்துறையில் கவனத்தைக் குறைத்துக்கொண்டு விட்டார்கள் தானே?

இவ்வளவு சிறப்பம்சங்கள் கொண்டிருந்தாலும் கவர்ச்சியைப் பொறுத்தளவில் மற்றய பத்திரிகைகளிலும் பார்க்க பின்தங்கியேயுள்ளது என்பது ஒப்புக்கொள்ள வேண்டிய உண்மைதான். 'ஈழநாடு' பத்திரிகையில் [வாரமலர் நீங்கலாக] ஏதாவதுபுகைப்படங்களைக்காணுவது அபூர்வம்தான். பத்திரிகை ஸ்தாபனத்தினருக்கு எவ்வளவோ அசௌகரியங்கள் இருந்தாலும் கூட இந்தக் கவர்ச்சி விஷயத்தில் அவர்கள் கவனம் எடுக்காதது பத்திரிகைவளர்ச்சியைச் சேதப்படுத்தியுள்ளதென்றே சொல்லவேண்டும் வேண்டிய இடங்களில் புகைப்படங்களையும் உரிய பகுதிகளுக்கான ஓவியத்துண்டுகளையும் சொருகி பத்திரிகைப்பக்கங்களின். அமைப்பழகில் இன்னும் அதிக கவனமெடுக்க நிர்வாகஸ்தர்களோ, இயக்குநர்களோ தவறுவார்களேயாயின், நல்லதொருபத்திரிகை தேய்ந்து போகும். பழி அவர்களையேநிச்சயம்சாரும்.

மென்பதில் சிறிதும் ஐயமில்லை. 'தன் கடன் அடியேனையும் தாங்குதல் என் கடன்பணி செய்து கிடப்பதே'.

ஃ ஃ

குற்றம் நீ குணங்கள் நீ
கூடலால வாயிலாய்,
சுற்றம் நீ பிரானும் நீ
தொடர்ந்திலங்கு
சோதி நீ,
கற்றநூல் கருத்தும் நீ
அருத்தமின்ப மென்றிவை,
முற்று நீ புகழ்ந்து முன்
உரைப்பதென்மு கம்மனே,
— ஸ்ரீ திருஞானசம்பந்த
சுவாமிகள்.

[எனது குற்றமும், குணமும், சுற்றமும்நீயே. என்னை ஆட்கொண்டவனும், உள்ளிருந்துசோதியாய் வழிகாட்டுபவனும், நான் கற்ற நூல்களின் கருத்தும் நீதான். ஆகவே, இவற்றை மனதில் கொண்டு ஒழுகி, அன்பு செய்தல் அன்றி, முகமனாக உன்னைப் போற்றி உரைக்க என்ன இருக்கிறது?]

பெரி. சண்முகநாதன்.
கொழும்பு

## பெருகட்டும்

'பத்தாவது ஆண்டில் கால்வைக்கும் இப்பத்திரிகையில் இன்னும் ஒருசில அம்சங்களைக் கூட்டி போயாநாள் பத்திரிகை போல் பெரிய அளவாக அதன் பெருமதியையும் 15 சதமாக உயர்த்தி ஈழநாட்டு மக்கள் மனதில் அழியாது இடம்பெறக்கூடிய ஒரு பத்திரிகையாக வெளியிடும்படி வேண்டுகிறேன்.

மேன்மேலும் ஈழநாடு பத்திரிகை வளர்ச்சியுற்று தனது சேவையைச் செய்யுமென்பதில் எனக்கு அசைக்கமுடியாத நம்பிக்கை உண்டு.

ஐ. சி. சிவப்பிரகாசம்
நல்லூர்

''ஈழநாடு''க்குப் பத்தாவது வயது பிறப்பதாக அறிந்ததும் நமது வாசக நேயர்களிடமிருந்து எவ்வளவு வாழ்த்துக்களும் பாராட்டுகளும் குவிந்துள்ளன! பல கவிதைகளையும் கட்டுரைகளையும் படித்தேன். என் மனதை உருக்கி விட்டது நேயர்களின் அன்பு. இவ்வளவுக்கு நாங்கள் தகுதிதானா? எல்லாம் கருணைக்கடலான இறைவனுக்கே அர்ப்பணித்துவிட்டேன்.

ஃ ஃ ஃ

சில கடிதங்களில் குறைகளையும் அன்புடன் எடுத்துக்காட்டியிருக்கிறார்கள். படங்கள் இல்லையென்பதே முக்கிய குறை. சிலசில தவறுகள் ஏற்படுகின்றன. வேண்டுமென்று செய்வதில்லை. விருப்பு வெறுப்புகளும் எங்களுக்குக் கிடையா. தினசரிப் பத்திரிகை மிகமிக அவசரத்தில் தயாரித்து அன்றாடம் கொண்டுவர வேண்டியுள்ளது. தவறைச் சுட்டிக்காட்டினால் திருத்திக் கொண்டு அதற்காக வருத்தம் தெரிவிக்கவும் எப்போதும் தயாராக இருக்கிறோம். தன் குழந்தை தவறு செய்தால், அன்புள்ள பெற்றோர் பழிவாங்க எண்ணுவார்களா? குறைகளைப் பொருட்படுத்தாமல், தொடர்ந்து ஆதரவு காட்டி பாராட்டுகள் கூறி எங்களை உற்சாகப் படுத்தும் அன்பர்களுக்கு நாங்கள் எங்கள் நன்றியை எப்படித் தெரிவிப்பது?

ஃ ஃ ஃ

பத்தாவது ஆண்டு பிறக்கும் போதன்றி நிறையும் போதே ... வெளியிடலாமென்று ... பின்னர் தீர்மானித்தோம். ...

## ஐயாறன் எழுதுவது

...ருலும் கிடைத்துள்ள பிறந்ததின வாழ்த்துக்களை எல்லாம் அதுவரை நிறுத்தி வைப்பதும் அவ்வளவு சரியா? எல்லாவற்றையும் பிரசுரிக்கவும் இடமில்லை. அதனால் ஒரு சிலவற்றை மட்டும் இன்று வெளியிடுகிறோம். மற்ற அன்பர்களின் வாழ்த்துக்களை பின்னர் வசதிபோல் வெளியிட எண்ணியுள்ளோம். அன்பர்கள் பொறுத்தருள்வார்களாக!

ஃ ஃ ஃ

கொழும்பிலிருந்து இப்போது தமிழ் தினசரிகள் புதிது புதிதாக வருகின்றன. இந்தப் போட்டிகளையெல்லாம் சமாளிக்க முடியாமல் 'ஈழநாடு' படுத்துவிடுமென்றும் ஓர் அன்பர் அஞ்சினாராம். இதனால் 'ஈழநாடு' பிரதிகள் மிகவும் குறைந்து விட்டதோ என்று அந்த அன்பர் மிகவும்கவலையுடன் கேட்டார். உண்மையில் புதிய பத்திரிகைகள் வந்தபின், 'ஈழநாடு' பத்திரிகைப் பிரதிகள் கூடியுள்ளன! இதைத் தெரிவித்ததும் அந்த அன்பர் வியப்படைந்து வாழ்த்தினார். புதிய பத்திரிகைகள் வந்தபின், 'ஈழநாடு' பத்திரிகையின் மதிப்பும் தமிழ் மக்களிடை உயர்ந்துள்ளதென்று மற்றோர் அன்பர் போற்றுகின்றார். நன்றி நன்றி!

...—த்தி வைக்கவரும் திருவருள், இன்புற... நடத்து...

## ரோட்டரி கவர்னரின் விஜயம்

யாழ்ப்பாணம், ஞாயிறு ரோட்டரி கிளப்பின்புதிய கவர்னரான திரு. ஆர். மேத்தா யாழ்ப்பாணத்துக்கு இரண்டு நாள் விஜயத்தை மேற் கொண்டுள்ளார். நேற்று முன் தினப் மாலை இவர் விமான மூலம் பலாலியை வந்தடைந்தார்.

இங்கு தங்கியிருக்கும்நாட்களில் இவர் ரோட்டரிச் சங்க வேலைகளில் கவனம் செலுத்துவதோடு. இங்குள்ள வரலாற்றுப் பெயர் பெற்ற இடங்களையும் பார்வையிடுவாரெனத் தெரிகின்றது. (கா. தி.)

## சாரண தலைவி இங்கு வருகிறார்

கொழும்பு, சனி

உலக பிரதம சாரணிய தலைவியான ஒலேவ்பேடன்-பவல் சீமாட்டி அடுத்த வாரம் இலங்கைக்கு விஜயம் செய்யவிருக்கிறார். சர்வதேச பெண் சாரண முகாமின் ஐம்பதாண்டு விழா வைபவங்களில் கலந்துகொள்ள வென பெப்ரவரி மாதம் 16-ம் திகதி கொழும்புவரும் ஒலேவ் சீமாட்டி இம்மாதம் 20-ம் திகதிவரை தங்கியிருப்பார்.

## சங்கானை கலவர

1-ம் பக்கத் தொடர்ச்சி/ லைச் சீரடைய வைக்க, தொடர்ந்து ஊரடங்குச்சட்டம் அமுல் நடத்தப்பட்டு வருகின்றது. இக்கலவரங்களின் பயனாக யாழ்ப்பாணம் குற்றத் தடுப்புப் பகுதி பொலிஸ் இன்ஸ்பெக்டராகக் கடமையாற்றிய திரு. மெண்டிஸ் சங்கானைக்கு இடமாற்றஞ் செய்யப்பட்டுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "மனித உணர்ச்சிகளை வைத்து கவிதை ஆக்கப்படல் வேண்டும்"

## பரிசு பெற்ற ஈழத்து கவிஞர்கள் பாராட்டு விழாவில் சொக்கன்

குரும்பசிட்டி, சனி

"கவிதைத்துறைக்கு மற்றைய இலக்கியத்துறைகளிலும் பார்க்க வரவேற்பு மகத்துவம் உலக அரங்கிலேயே மிகக் குறைவாகவே யுள்ளது. இதற்குக் காரணகர்த்தாக்கள் கவிஞர்களே யாகும். மனிதனது நாளாந்த வாழ்க்கையில் ஏற்படும் உணர்ச்சிகளை வைத்தும் ஆன்மாவின் உள்ளக் கருத்தை அடிப்படையாகக் கொண்டும கவிதை ஆக்கப்படல் வேண்டும்."

குரும்பசிட்டி கிராம முன்னேற்றச்சங்க மண்டபத்தில உலகத் தமிழாராய்ச்சி மகாநாட்டையொட்டி நடாத்தப்பட்ட கவிதைப போட்டியில் பரிசுபெற்ற கவிஞர்கள் இ. அம்பிகைபாகன், இ. நாகராஜன் ஆகியோருக்கு அளிக்கப்பட்ட பாராட்டு உபசாரவிழாவில் கலந்து கொண்டு பேசுகையில் யாழ். இந்துக்கல்லூரி ஆசிரியர் திரு க. சொக்கலிங்கம் [சொக்கன்] மேற்கண்டவாறு தெரிவித்தார்.

உதயதாரகை சனசமூக நிலைய ஆதரவில் நடைபெற்ற இவ்விழாவுக்கு திரு. சி. கனகசுந்தரம் தலைமை வகித்தார்.

திரு. சொக்கன் மேலும் பேசுகையில் கூறியதாவது:

தேசிய உணர்வுகளையும் இலட்சியங்களையும் கொண்டு ஆன்மாவின் உள்ளக்கருத்தை வெளிப்படுத்தி ஆக்கிய பாரதியார் கவிதைகள் எக்காலத்திலும் மக்கள் மத்தியிலிருந்து அழிந்து போகா வண்ணம் இருக்கின்றன. ஆனால் வெறுப்பு உணர்ச்சியுடன் ஆக்கப்பட்ட பாரதிதாசன் கவிதைகள் இன்று மக்கள் மத்தியில் செல்வாக்கு இழந்து ஒரு கட்சியினரின் நலன்களுக்காகவே பயன்படுத்தப் பட்டு வருகின்றது எனவே எதிர் காலத்தில கவிதைத் துறையில் சிறந்த சகாப்தத்தை உருவாக்க ஈழத்துக் கவிஞர்கள் பகைமை, வெறுப்புணர்ச்சியற்ற அன்பு, நேசம் அறம், அமைதி போன்றவற்றை அடிப்படையாகக் கொண்டு கவிதை ஆக்க வேண்டும்.


பரிசு பெற்ற இரு கவிஞர்களையும் பாராட்டி பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டி, கவிஞர் வி. கந்தவனம் ஆகியோர் உரைநிகழ்த்தினர். தமக்கு அளிக்கப்பட்ட பாராட்டு உபசாரத்திற்கு நன்றி தெரிவித்து இரு கவிஞர்களும் பேசினர்.

விழாவில் சிறப்பு அம்சமாக 'வானத்தைப்பார்த்தேன்'' என்ற தலைப்பில் கவிஞர் மகாகவி தலைமையில் கவியரங்கம் நடைபெற்றது. இக்கவியரங்கில் இ. அம்பிகைபாகன், இ. நாகராஜன், வி. கந்தவனம், ஆறுமுகம் ஆகியோர் கலந்து கொண்டனர். இறுதியில் கதம்ப நிகழ்ச்சிகளும் இடம் பெற்றன.

## விஞ்ஞானச் சுற்றுலா

உடுப்பிட்டி, சனி

நெல்லியடி அரசினர் மத்திய மகா வித்தியாலய விஞ்ஞான வகுப்பு மாணவர்கள நாகர்கோவிலுக்கும், பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி விஞ்ஞான மாணவர்களும், கரவெட்டி விக்கினேஸ்வரக் கல்லூரிமாணவர்களும் ஆனையிறவுக்கும் விஞ்ஞானச் சுற்றுலாசென்று ஆராய்வு நடத்தினர்



## வித்தியாதரிசியாக நியமனம்

யாழ்ப்பாணம், ஞாயிறு

திரு. டபிள்யு ஆர். அருளையா மஸ்கேலியாவுக்கு வட்டார வித்தியாதரிசியாக 1-3 68இலிருந்து நியமிக்கப் பட்டுள்ளார் இவர் கொழும்பு சென்ற் ஜோசப் கல்லூரி, அனுராதபுரம், யாழ். மத்திய கல்லூரி, யாழ்ப்பாணக் கல்லூரி ஆகிய கல்லூரிகளின் பழைய மாணவராவார் சிறந்த விளையாட்டு வீரருமாவார்.

சென்னை சர்வகலாசாலையில் புவியியலைச் சிறப்புப் பாடமாகக் கற்று, கலைப்பட்டதாரியாக இரண்டாம் பிரிவில் சித்தியடைந்த இவர் கோவை கலைக்கல்லூரி பழைய மாணவருமாவார் உலகக் கல்வி மகாநட்டுக்கு இந்தியாவின் பிரதிநிதியாகத் தெரிவு செய்யப்பட்டு, இங்கிலாந்து பிரான்ஸ், ஜேர்மனி, சுவிற்சலாந்து, இத்தாலி, எகிப்து ஆகிய நாடுகளுக்கு விஜயஞ் செய்யும் வாய்ப்பைப் பெற்றூர்.

இவர் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி, கொழும்பு வெஸ்லிக் கல்லூரி, ஆகிய இரு கல்லூரிகளது பழைய ஆசிரியராவார். தற்போது நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் புவியியல் ஆசிரியராகவும், சாரண ஆசிரியராகவும், கடேற் ஒவ்வீசராகவும், புவியியல் சங்க ஆலோசகராகவும் கடமையாற்றுகிறூர் மேலும் வடமராட்சி சாரணர் மாவட்டச் சங்கக் காரியதரிசியாகவும், வடமராட்சி விளையாட்டுச் சங்கக் காரியதரிசியாகவும், வடமராட்சி ஆசிரிய சங்க உப-தலைவராகவும், உடுப்பிட்டி கல்விச் சபை உப-காரியதரிசியாகவும், பருத்தித்துறை கிறிஸ்தவ வாலிபர் சங்க காரியதரிசியாகவும் பணியாற்றியுள்ளார்.

இவர் காலஞ்சென்ற திரு. ஜே வி அருளையாவின் [தலைமையாசிரியர்] மகனும் திரு. ஜே எஸ் வேலாயுதம் [இளைப்பாறிய தலைமையாசிரியர்] மருமகனுமாவார். (நி)

# எதிரி அல்பேனியாவில்; வழக்கு ஒத்திவைப்பு

குரும்பசிட்டி, சனி

இலங்கை கம்யூனிஸ்ட் [சீனசார்பு] கட்சியின யாழ்ப்பாணப் பிரதேசக் கிளையின் உறுப்பினர்களான கே. ஏ சுப்பிரமணியம் வி. ஏ. கந்தசாமி, கே கணபதிப்பிள்ளை அல்லது சூரமணி ஆகிய மூவருக்கும் எதிராக சட்டவிரோத ஊர்வலம் நடத்தியது உட்பட மூன்றுகுற்றச்சாட்டுக்களின் பேரில பொலிசாரால் தொடரப்பட்டுள்ள வழக்கு விசாரணை மல்லாகம் நீதிபதி திரு, எம் சண்முகலிங்கம் முன்னிலையில் விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

இவ்வழக்கில் சம்பந்தப்பட்ட இரண்டாம் எதிரி நீதிமன்றத்தில் ஆஜராகவில்லை. எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஏ. அன்ரனி இரண்டாம் எதிரி கயரோக நோய்வாய்ப்பட்டு தற்போது அல்பேனியா தேசத்தில் சிகிச்சை பெற்று வருகின்றூர் எனறும சுமார் மூன்றுமாத காலத்தின் பின்னரே நாடு திரும்பக்கூடிய நிலைக்கு வருவாரெனவும் நீதிபதியிடம் தெரிவித்தார்.

நீதிபதி சித்திரைமாதம் 7-ம் திகதிக்கு வழக்கு விசாரணையை ஒத்திவைத்தார்.

இன்றைய விசாரணையின் போது சாட்சியமளிக்க உதவிப் பொலிஸ் சுப்பிரின்டென்ட்டுகளான திரு. ஏ. தவராசா, திரு. டபிள்யூ வியனகே ஆகியோர் நீதிமன்றத்தில் சமூகமளித்திருந்தனர்.


## தேவை

## மரவள்ளிக் கிழங்கு

மரவள்ளித் தோட்டக்காறரிடமிருந்து ஒரு நாளில் 500 முதல் 1000 றுத்தல்வரை வாங்கப்படும்.

## ஸ்ரீ லங்கா ரப்பியோகா புறடக்ஸ்

தொடர்பு கொள்ளுங்கள்:
ஆர். சின்னத்தம்பி
2-ம் வட்டாரம்
முள்ளியவளை
அல்லது
சுந்தரம் பிறதர்ஸ்
73, மின்சார நிலைய வீதி — யாழ்ப்பாணம்.


## தமிழ் நாடக வளர்ச்சி

யாழ்ப்பாணம், ஞாயிறு

இலங்கை சாஹித்திய மண்டலத்தின் ஆதரவில் இம்மாதம் 26, 27ந் திகதிகளில் யாழ்ப்பாணத்தில் தமிழ் நாடக வளர்ச்சி பற்றிய கருத்தரங்கு ஒன்று நடைபெறவிருக்கிறது.

யாழ். மத்திய கல்லூரி மண்டபத்தில் நடைபெறவிருக்கும் இவ்விழாவில் ... ஆசிரியர் ... தமிழ் ... ... ளும் கலந்துகொள்ளவிருக்கிறூர்கள். (கா. நி)

அனலைதீவு

## ஆயுள்வேத வைத்தியசாலையில் மருந்துத் தட்டுப்பாடு

அனலைதீவு, சனி

அனலைதீவுக் கிராமசபையின் ஆயுள்வேத வைத்தியசாலையின் தரம் கடந்த ஆண்டுகளைவிடக் குன்றிவருகிறது. நாடு முழுவதிலும் ஆயுள்வேத வைத்தியசாலைகளை நிறுவி அவற்றை விஸ்தரித்துக் கொண்டிருக்கும் இவ்வேளையில் இங்குள்ள வைத்தியசாலை மருந்துத் தட்டுப்பாட்டுடன் இருப்பதன்காரணம் என்ன? என்று அனலைதீவு முற்போக்கு வாலிபர் இயக்கச் செயலாளர் அனலைதீவு கிராமசபைத் தலைவரைக் கேட்டுள்ளார்.

கடந்த ஆண்டுகள்ல் வருடத்தில் கிட்டத்தட்ட 7000 நோயாளர்கள் சிகிச்சை பெற்ற இவ்வைத்தியசாலையில் மருந்துத் தட்டுப்பாடு காரணமாக சிகிச்சைபெறும் நோயாளர்கள் குறைந்து கொண்டே வருவதாகவும்' ஆயுள்வேத வைத்தியசாலையின் நிலைபற்றி கிராமசபையின் ஒவ்வொரு கூட்டத்திலும் ஆலோசித்துக் கவனமெடுக்கும் பட்சத்தில் இதன் தரத்தை உயர்த்தி அதிருப்தியை நீக்கலாமென்றும் அக்கடிதத்தில்யோசனை கூறப்பட்டுள்ளது.

அனலைதீவில் தரமான ஆங்கில வைத்தியசாலையும் இல்லாதிருக்கும் இவ்வேளையில் ஆயுள்வேத வைத்தியசாலையும் மருந்துத் தட்டுப்பாட்டுடன் இயங்கிவருவது பற்றி பொதுமக்கள் விசனம் தெரிவிக்கின்றனர் வாட்டுகளுடன் பெரிய வைத்தியசாலைக் கட்டடத்தைக் கட்டுவதற்காக அரசினரால் பல வருடங்களுக்குமுன்னர் ஒதுக்கப்பட்ட பணம் இதுவரை ஆக்கவேலையில் ஈடுபடுத்தப் படவில்லையென்றும் இதுபற்றி அனலைதீவு கிராமமுன்னேற்ற சங்கத்தினர் சம்பந்தப்பட்ட இலாகாவுடன் தொடர்பு கொண்டிருந்தனராயினும் எவ்வித முடிவும் தெரியவில்லையென்றும் அரசினரால் ஒதுக்கப்பட்ட குறித்தபணம் கொடுக்கப்பட்ட திட்டப்படி கட்டடம் அமைக்க போதாதெனக் கூறியவ கொந்தராத்துக்காரர் அதைச் செய்துமுடிக்க மறுத்துள்ளதாகவும் நோயாளரிடையே நிலவும் அறியப்படுகிறது.

# யாழ். இலக்கியவட்ட இரண்டாவது ஆண்டு விழா

## நாளை நடைபெறுகிறது

யாழ்ப்பாணம், ஞாயிறு

யாழ்ப்பாண இலக்கிய வட்டத்தின் இரண்டாவது ஆண்டுவிழா நாளை தெல்லிப்பழை யூனியன் கல்லூரியில் நடைபெறும்.

யாழ் இலக்கிய வட்டத் தலைவர் ஏ. ரி. பொன்னுத்துரை தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் உலகத் தமிழாராய்ச்சி மகாநாட்டுக் கவிதைப் போட்டியில் சான்றிதழும் பதக்கமும் பெற்றவர்களான கவிஞர்கள் இ. நாகராஜன், இ. அம்பிகைபாகன் ஆகிய இருவர்களுக்கும் தேநீர் விருந்தும் பாராட்டும் நடைபெறுவது முக்கிய அம்சமாக இடம்பெறும்.

மாலை 4 மணி தொடக்கம் 5 மணிவரை நடைபெறும் பாராட்டுவிழாவுக்குப் பின்னர் கவிதை இலக்கியம் என்னும் பொருள்பற்றி பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை விரிவுரையாளர் பண்டிதர் க. சச்சிதானந்தம் சிறப்புச்சொற்பொழிவு நிகழ்த்துவார்.

கவிஞர் அம்பிகைபாகன் இயற்றிய 'கிறீனின் அடிச்சுவடு' என்னும் வசன நூல் வெளியீட்டு வைபவம் நடைபெறும். இந்நூலை வழக்கறிஞர் ம. சிதம்பரநாதன் வெளியிட்டு வைப்பார். முதற்பிரதியை பலாலி அரசினர் பயிற்சிக்கலாசாலை அதிபர் சி. கந்தசாமி பெற்றுக்கொள்ளுவார்.

இரசிகமணி கனக செந்திநாதன், திரு ஐ. பொன்னுத்துரை ரத்தினம், திரு க. கிருஷ்ணபிள்ளை ஆகியோர் ஆய்வுரை நிகழ்த்துவர்.

இவ்விழாவில் கலந்துகொள்ளும் பொருட்டு விசேட பஸ்வண்டி வசதி செய்யப்பட்டுள்ளது. இரவு 9-30 மணிவரை தெல்லிப்பழையிலிருந்து யாழ்ப்பாணத்துக்குத் திரும்புவதற்கு பஸ்சேவை ஒழுங்குசெய்யப்பட்டுள்ளது. (நி)

## இடமாற்றம்

பண்டத்தரிப்பு, சனி

நெடுந்தீவு காரியாதிகாரி கந்தோரில் கடமையாற்றிய திரு. எஸ் டேவிட் யாழ்ப்பாணத்துக்கு இடமாற்றம் பெற்றுள்ளார்.

அனலைதீவு

## பெரியபுலம் பிள்ளையார் உற்சவம்

அனலைதீவு, சனி

அனலைதீவு பெரியபுலத்தில் உள்ள கணபதிப்பிள்ளையார் கோயிலின் திருவிழா உற்சவபட்சம் மாறியுள்ளதால் வருடாவருடம் ஆடியில் நடைபெறும் இத்திருவிழா இவ்வருடம் பங்குனி மாசத்தில் நடைபெறவுள்ளது.

## அதிபராக இடமாற்றம்

யாழ்ப்பாணம், சனி.

வவுனியா சாளம்பைக் குளம் மகாவித்தியாலய அதிபராக திரு என். ஜெயபாலசிங்கம் பதவி உயர்வு பெற்றுள்ளார். சானம் குள மகாவித்தியாலயபாடசாலையில் புனரமைப்புத் திட்டத்தின்கீழ் இவர் இவ்வாண்டிலிருந்து முதல் அதிபராக நியமனம் பெற்றுள்ளார்.

## 'பொருளாதார சுதந்திரமே பூரண சுதந்திரம்'

மீசாலை, சனி

'எமது நாடு அரசியல் சுதந்திரம் பெற்று இருபது ஆண்டுகள் மறைந்தோடி விட்டன ஆனால் இதுவரை பொருளாதார சுதந்திரத்தைப் பெறுதிருப்பது நமது நாட்டு மக்கள் தேசியத்தின் மேல் வைத்திருக்கின்ற பலவீனத்தைத்தான் காட்டுகிறது ஒரு நாடு அரசியல் சுதந்திரத்துடன் பொருளாதார சுதந்திரமும் பெற்றால் தான் அது பூரண சுதந்திர நாடாகக் கருத முடியும்'' என்று சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி மண்டபத்தில் தென்மராட்சி காரியாதிகாரி திரு. இ. சிதம்பரப்பிள்ளை தலைமையில் நடந்த சுதந்திரதின விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரை நிகழ்த்திய யாழ் மாவட்ட உதவி அரசாங்க அதிபர் திரு. தி முருகேசம்பிள்ளை கூறினார்.

திரு. எஸ். கே. திரவியநாயகம் திரு கே வேலுப்பிள்ளை ஆகியோரும் பேசினர்கள் கலைநிகழ்ச்சிகளும் இடம் பெற்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "எல்லாக் காலத்திலும் எல்லாவித விளையாட்டும் இங்கு வேண்டும்"

## யாழ்ப்பாணத்தில் உடற்பயிற்சிப் போதனாசிரியர் கருத்து

யாழ்ப்பாணம், சனி

தேசிய விளையாட்டமைச்சின் உடற்பயிற்சிப் பிரதம போதனாசிரியரான திரு அன்ரனி அபயசிங்கா கடந்த வாரம் இறுதியில் உத்தியோக பூர்வமாக யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்து இங்குள்ள பல கல்லூரிகளிலும் உடற்பயிற்சி வகுப்புகளை நடத்தினர். மாணவர்களுக்கென சென்ஜேம்ஸ் கல்லூரியில் நடாத்தியபயிற்சியில் மத்திய கல்லூரி, சென்பற்றிக்ஸ், சென்ஜோன்ஸ் ஆகிய கல்லூரிகளின் மாணவர்கள் கலந்து கொண்டனர்.

மாணவிகளுக்கென வேம்படி மகளிர் கல்லூரியால் நடாத்திய பயிற்சி வகுப்பில் கண்டுக்குளி மகளிர் கல்லூரி, 'கன்வென்ட்' மாணவிகள் வேம்படி மகளிர் கல்லூரி மாணவிகள் ஆசியோர் கலந்து கொண்டனர். கனகரத்தினம் மகா வித்தியாலயத்திலும் பயிற்சிகள் நடாத்தப்பட்டன.

யாழ்ப்பாணத்தில் ஒவ்வொரு காலத்தில் ஒவ்வோர் விளையாட்டுக்கள் மாத்திரம் நடாத்துவது தவிர்க்கப்பட்டு சகல காலங்களிலும் சகல விளையாட்டுக்களும் நடாத்தக் கூடியதாக இங்குள்ள மாணவர்களுக்குப் பயிற்சியளிக்கப்பட வேண்டுமென திரு. அன்ரனி அபயசிங்கா அபிப்பிராயம் தெரிவித்தார். [கா. நி]

## சமமான முடிவு

குரும்பசிட்டி, சனி

தெல்லிப்பழை யூனியன் கல்லூரிக்கும் யாழ்ப்பாணம் மத்தியகல்லூரிக்குமிடையில் வாரஇறுதியில் நடைபெற்ற வருடாந்த சிநேகபூர்வமான கிரிக்கெட் போட்டி இரு கல்லூரிகளில் எவருக்கும் வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தது இவ்வாட்டம் யாழ். மத்திய கல்லூரி விளையாட்டு மைதானத்தில் நடந்தது.

முதலில் துடுப்பெடுத்தாடிய மத்திய கல்லூரி வீரர்கள் தமது முதல் இன்னிங்ஸில் எல்லா விக்கெட்டுகளையும் இழந்த நிலையில் 204 ரன்களைப் பெற்றனர். இதைத் தொடர்ந்து ஆட்டம் ஆடிய யூனியன் கல்லூரி வீரர்கள் 124 ரன்களைக் கைப்பற்றினர் எல்லா விக்கட்டுகள் நஷ்டத்திற்கு முதல் இன்னிங்ஸில் குறைவான ஓட்டங்களையே யூனியன் வீரர் அடித்திருந்தனர். இரண்டாவது இன்னிங்ஸில் மத்திய கல்லூரியினர் 7 விக்கெட்டுகளுடன் ஆட்டத்தை நிறுத்திக் கொண்டனர் இவ்வேளையில் 80 ரன்களைப்பெற்றிருந்தனர். பின்னர் விளையாடிய யூனியன் வீரர்கள் மிகத்திறமையாகத் துடுப்பெடுத்தாடி ஒரு விக்கெட்டையிழந்து 112 ஓட்டங்களை எடுத்திருந்தனர் நேரம் போதாமையால் போட்டி வெற்றி தோல்வியில்லாது முடிந்தது.

## 'வெற்றி தோல்வி சகஜம்'

உடுப்பிட்டி, சனி

"எம் மனத்தில் சுயநலமும், விரோதங்களும் ஏற்படாமல்பார்த்துக் கொள்ள வேண்டும். அரசியலிலும் பாராளுமன்றத் தேர்தலிலும் வெற்றி தோல்விகள் ஏற்படுவது சகஜம். தேர்தல் முடிந்ததும் அனைவரும் ஒற்றுமையாகி விடுகின்றோம். இதனையே விளையாட்டு வீரர்களும் கடைப்பிடிக்க வேண்டும்."

இவ்வாறு பருத்தித்துறை யுனைட்டெட் விளையாட்டுக் கழகத்தின் வர்த்தகர் மு. பொ. வீரபாகு ஞாபகார்த்த வெற்றிக் கேடய உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் 2-ம் ஆண்டு பரிசளிப்பு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட உடுப்பிட்டி எம். பி. திரு. மு. சிவசிதம்பரம் கூறினார். இக்கூட்டம்பருத்தித்துறை நாவலர் அரங்கில் நடைபெற்றது.

பருத்தித்துறை நகரசபைத்தலைவர் திரு. என். நடராசாவும் பேசினார்.

## கரவெட்டி மாணவர் சாதனை

உடுப்பிட்டி, சனி

கரவெட்டி மேற்கு மெதடிஸ்த மிஷன் பாடசாலையிலிருந்து அகில இலங்கை அரசினர் பாடசாலை ஆசிரியர் சங்கம் நடாத்திய பரீட்சைக்குத் தோற்றிய 20 மாணவர்களும் சித்திபெற்றுள்ளனராம். இதனால் நேற்றுார் பாடசாலை ஆசிரியர்களைப் பாராட்டியுள்ளனர்.

## திருடியவருக்கு 6மாத கடுழியம்

குரும்பசிட்டி, சனி

பலநோக்கு கூட்டுறவுச் சங்கக் கடையிலிருந்து சாரங்களை களவாடிய யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இராசையா செல்வராசா என்பவருக்கு மல்லாகம் மாஜிஸ்திரேட் திரு எம். சண்முகலிங்கம் ஆறுமாதக் கடுழியச் சிறைத்தண்டனை வழங்கித் தீர்ப்பளித்தார்.

சுன்னாகம் பொலிசார் இவ்வருடம் தைமாதம் 12-ம் திகதி சுன்னாகம் கூட்டுறவுச் சங்கக் கடையில் விற்பனவுக்கு வைக்கப்பட்டிருந்த சாரன்களை இராசையா செல்வராசா என்பவர் திருடியதாகக் குற்றஞ்சாட்டிதொடரப்பட்டுள்ள வழக்கு விசாரணையின் பின்னர் நீதிபதி இத் தீர்ப்பை விதித்தார். விசாரணை முடிவில் எதிரி குற்றவாளியாகக் காணப்பட்டு முன்னரும் மூன்று தடவைகள் குற்றப்பட்டுள்ளார் எனவும் நீதிமன்றத்தில் தெரிவிக்கப்பட்டது.

# வடபகுதி விளையாட்டு அபிவிருத்திக்கு ரூ. 13,500 அமைச்சு வழங்கும்

யாழ்ப்பாணம், ஞாயிறு

வடபகுதியின் விளையாட்டு அபிவிருத்திக்காக விளையாட்டமைச்சு 13,500 ரூபாவை நன்கொடையாக வழங்கவிருக்கின்றது.

ஒவ்வொரு காரியாதிகாரி பிரிவுக்கும் தலா 500 ரூபாவீதம் இப்பணம் வழங்கப்படும். யாழ்ப்பாணம் அரசாங்க செயலக விளையாட்டுப் பகுதிக்கு 1000 ரூபா இத்திட்டத்தின்கீழ் வழங்கப்படும்

கிராமங்கள் தோறும் தேசிய விளையாட்டுக்களை விருத்தி செய்யவும் சனசமூக நிலையங்கள் விளையாட்டுக்கழகங்கள் மூலம் விளையாட்டுகளுக்குப் புத்துயிரளிக்கவுமே இந்த நன்கொடை வழங்கப்படவிருப்பதாக விளையாட்டுப் பகுதியைச் சேர்ந்த முக்கிய அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இத்திட்டத்திலகீழ் வவுனியா, மன்னார் ஆகிய இடங்களுக்கும் விளையாட்டமைச்சு இந்நன்கொடைப் பணத்தையும் வழங்கவுள்ளது. [கா. நி.]

## பிரயாணிகள் கஷ்டம்

அனலைதீவு, சனி

அனலைதீவு துறைமுகத்தில் மலசலகூடம் இருந்தும் பாவிக்கமுடியாத நிலையில் உள்ளது

அனலைதீவுக் கிராமசபைக்குச் சொந்தமான மேற்படி மலசலகூடம் கவனிப்பாரற்ற நிலையில் உள்ளது இதனால் பிரயாணிகள் மிகவும் கஷ்டம் அனுபவிக்கின்றனர்.

## மாணவரின் குடிநீர் கஷ்டம்

உடுப்பிட்டி, சனி

கரவெட்டி மேற்கு மெதடிஸ்த மிஷன் பாடசாலையில் கிணறுகள் இருந்தும் பாடசாலைப் பிள்ளைகள் குடிதண்ணீரின்றிக் கஷ்டமடைந்து வருகின்றனர். இக்கிணற்றின் துலா பழுதானமையே மாணவர்களின் இக்கஷ்டத்திற்குக் காரணமாகும். இதனால் விவசாயம் ஒரு கட்டாய பாடமாக இருந்தும் பாடசாலைத் தோட்டத்தில் பயிர்கள் செய்ய முடியாமலுள்ளதாகவும் அறியப்படுகிறது. இக்கஷ்டங்களைக் கல்வி அதிகாரிகள் நேரில் சென்று பார்வையிட்டும் இதுவரை எவ்வித பயனுள்ள நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லையாம்.

## யாழ்ப்பாணத்தில் கரபந்தாட்டப் பயிற்சி

யாழ்ப்பாணம், சனி

தேசியவிளையாட்டமைச்சு கரப்பந்தாட்ட பிரதமபோதனாசிரியரான திரு. அழகேந்திரா இம்மாதம் 12ம் திகதி யாழ்ப்பாணத்துக்கு வருகின்றார்.

இரு தினங்கள் இங்கு தங்கியிருக்கும் இவர் பாடசாலைகளில் கரப்பந்தாட்டப் பயிற்சி வகுப்புகளை நடாத்துவார், [கா. நி]

## கயிறிழுவைப் போட்டி

உடுப்பிட்டி, சனி

பருத்தித்துறை ஒலிம்பிக் விளையாட்டுக் கழகத்திற்கும் கரவெட்டி சிந்தாமணி கோஷ்டியினருக்கு மிடையே சுதந்திர தின விழாவை யொட்டி நடைபெற்றகயிறிழுவைப் போட்டியில் சிந்தாமணி கோஷ்டி வெற்றியீட்டியது.

கரவெட்டி ஸ்பேஸ்கோஷ்டிக்கும் கராவளைசுடரொளி கோஷ்டிக்கு மிடையே ஏற்பட்டகயிறிழுவைப் போட்டியில் ஸ்பேஸ் வெற்றி பெற்றது.

கரவெட்டி ஸ்பேஸ்கோஷ்டிக்கும் நெல்லியடி சிந்தாமணி கோஷ்டிக்கு மிடையே ஏற்பட்ட கயிறிழுவைப் போட்டியில் சிந்தாமணி வெற்றியீட்டியது.

## கரவெட்டியில் மீண்டும் திருட்டு

புல்லுக்கட்டுவன், சனி

கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு கரவெட்டி மேற்கிலுள்ள பல வீடுகளில் திருடர் தமது கைவரிசையைக் காட்டியுள்ளனர். பல ஆயிரக்கணக்கான நகை, பணம் ஆகியன திருடப்பட்டுள்ளதாகத் தெரிகிறது சந்தேகத்தின்பேரில் ஓர் வையர் உட்படப் பல இளைஞரைப் பருத்தித்துறை பொலிசார்கைதுசெய்துவிசாரணையின் பின்னர் பிணையில் விட்டுள்ளனரெனினும் கடந்த காலத்தில் இப்பகுதியில் நடைபெற்ற களவுகளுக்கும் இச் சந்தேக நபர்களுக்குமிடையில் தொடர்பு உண்டா என்பது பற்றிப் பொலிசார் புலன்விசாரணை செய்வதாகத் தெரிகிறது

## புதிய நிர்வாகிகள்

அளவெட்டி, சனி

மயிலிட்டி றோமன் கத்தோலிக்க கன்னியர் மடப் பாடசாலை பெற்றோர் ஆசிரியர் சங்க புது வருட அங்கத்தவர்களாகப் பின் வருவோர் தெரிவு செய்யப் பட்டனர்:-

தலைவராக அப் பாடசாலை தலைமை ஆசிரியர் சங். இஸ்ரர் சென்மோறிஸ்கும், உபதலைவர்களாக:- ம. அந்தோனிமுத்துவும், சி. தீசதாசும், துணைக் காரியதரிசிகளாக: ச. லோறன்சும், ம. அருமைப்பிரகாசமும், தனாதிகாரியாக தி. கிருஸ்ணசாமியும் உபதனாதிகாரியாக எ. பர்சலினும் தெரிவு செய்யப்பட்டனர். 14பேர்கொண்ட ஒருநிர்வாகசபையும் தெரிவு செய்யப் பட்டது.


கெப்பிட்டல் [கொழும்பு] பிளாஸா [வெள்ளவத்தை] மைலன் [ஜிந்துப்பிட்டி]
வெலிங்டன் [யாழ்ப்பாணம்] விஜயா [மட்டக்களப்பு] ஸ்ரீகிருஷ்ணா [திருமலை]
மொடர்ன் [பதுளை] ராஜ் [நீர்கொழும்பு]
ரவிச்சந்திரன், கல்பனா, நாகேஷ் நடித்த



மதராஸ் To பாண்டிச்சேரி

REGAL JAFFNA
Daily at 4-30, 7-00, & 9-45 p.m
ANTHONY QUINN & VIRNA LISI in
The 25th Hour
[in Metro color]

நியூ காலிங்கன் (இணுவில்)
தினசரி 6-30, 10-00 மணி
விடுமுறை தினங்களில் 2-30
மனோகர் — பிரேமா நடித்த
வண்ணக்கிளி

ராஜா (யாழ்ப்பாணம்)
தினசரி 2-30, 6-30, 9-30
போயா தினங்களில் 4 காட்சி
7வது வாரம்!
எம். ஜி. ஆர். - ஜெயலலிதா நடித்த
காவல்காரன்

MANOHARA JAFFNA
Daily at 4-45, 7-00, 9-45 P.M
Nicola Parenti & Lucretia Love in
K. O. Four to Go
(Adults only)


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# கிளிநொச்சி எம். பி.யின் தீர்மானம் ஏகமனதாக நிறைவேறியது

## பிரதிநிதிகள் சபையில் மொழிபெயர்ப்பு ஏற்பாடு

கொழும்பு, வெள்ளி

மக்கள் பிரதிநிதிகள் சபையில் தமிழில் நிகழ்த்தப்படும் சொற்பொழிவுகளை சிங்களத்திலும், சிங்களத்தில் நிகழ்த்தப்படும் சொற்பொழிவுகளை தமிழிலும் உடன் மொழிபெயர்க்க வேண்டும் என்று கூறும் தீர்மானம் இன்று ஏகமனதாக நிறைவேறியது.

சிங்களத்திலும் ஆங்கிலத்திலும் சபையில் நிகழ்த்தப்படும் சொற்பொழிவுகளை தமிழிலும், தமிழிலும் ஆங்கிலத்திலும் நிகழ்த்தப்படும் சொற்பொழிவுகளை சிங்களத்திலும் மொழிபெயர்க்கவேண்டும் என்று கிளிநொச்சி எம். பி. பண்டிதர் கே. பி. ரத்தினம் தனிப்பட்ட முறையில் தீர்மானம் ஒன்றை சபையில் கொண்டுவந்தார்.

இத்தீர்மானத்துக்கு திரு. பிரின்ஸ் குணசேகரா கொண்டுவந்த திருத்தம் ஒன்றில் சிங்களத்தில் நிகழ்த்தப்படும் சொற்பொழிவுகளை தமிழிலும் தமிழில் நிகழ்த்தப்படும் சொற்பொழிவுகளை சிங்களத்திலும் மொழி பெயர்க்க வேண்டும் என்று குறிப்பிட்டிருந்தார். பண்டிதர் ரத்தினத்தின் தீர்மானம் திரு. பிரின்ஸ் குணசேகராவின் திருத்தத்துடன் ஏகமனதாக நிறைவேறியது.

தீர்மானத்தை நல்லூர் எம். டாக்டர் நாகநாதன் அனுவதித்துப் பேசினார். சிங்கள அங்கத்தவர்கள் கூறும் நல்ல விஷயங்களை தமிழர்களும், தமிழர்கள் கூறும் மிக நல்ல விஷயங்களை சிங்களவர்களும் புரிந்து கொள்ள இந்த ஏற்பாடு உதவுமென்று அவர் குறிப்பிட்டார்.

திரு. லெஸ்லி குணவர்த்தன பேசுகையில், எந்த மொழியில் சொற்பொழிவு நிகழ்த்தப்படுகிறதோ அதே மொழியில் தான் ஹன்சார்ட்டில் பதியவேண்டும் என்றும், மொழி பெயர்ப்புகளுக்கு வேறு ஒரு ஏற்பாடு வைத்துக்கொள்ளவேண்டும் என்றும் குறிப்பிட்டார்.

திரு. ரி. பி. தென்னக்கூன் பேசுகையில், எதிர்காலத்தில் சிங்கள அங்கத்தவர்கள் அனைவரும் சிங் சிங்களத்திலேயே பேச விருப்பதால் இந்த ஏற்பாடு மிகவும் பயனுள்ளதாகவிருக்கும் என்றார்.

## 19 கறுப்பர்களுக்கு ஜென்மதண்டனை

லண்டன் பெப். 9

தென்னாபிரிக்காவில் அரசாங்கத்தைக் கவிழ்க்கச் சதி செய்ததாக கறுப்பர்கள் மீது குற்றஞ்சாட்டப்பட்டிருந்த வழக்கில் 19 பேருக்கு ஜென்மதண்டனை விதிக்கப்பட்டது. 9 பேருக்கு 20 வருட சிறைத் தண்டனையும் 2 பேருக்கு 5 வருட சிறைத்தண்டனையும் விதிக்கப்பட்டுள்ளது.

## நகரசுத்தித் தொழிலாளர் வேலைநிறுத்தம்

யாழ்ப்பாணம், வெள்ளி

யாழ்ப்பாணம் மாநகர சபையைச் சேர்ந்த நகர சுத்தித் தொழிலாளர்களில் சிலர் நேற்று வேலைநிறுத்தம் செய்துள்ளதாகவும், அதனால் சில பகுதிகளில் அசுத்தங்கள் சேர்ந்து சுகாதாரத்துக்குத் தீங்கு செய்வதாகவும் தெரிகிறது.

அத்தொழிலாளர் தங்களுக்கு விசேஷ படிச்செலவு அளிக்கப்படாதது காரணமாக இவ்வேலைநிறுத்தம் செய்வதாக அறியக் கிடக்கிறது.

## வண்ணைசிவன்கோவில் வீதியில் ஒருவழிப்பாதை

யாழ்ப்பாணம், சனி

வண்ணார்பண்ணை சிவன் கோவிலைச் சுற்றியுள்ள வீதியால் இனி ஒரு வழிப்பாதையாக போக்குவரத்து நடைபெற ஏற்பாடாகியுள்ளதாகத் தெரிகிறது.

மாநகரசபை அதிகாரிகளும் பொலிஸ் அதிகாரிகளும் கலந்து பேசி, இம்முடிவு செய்துள்ளனர். குறுகிய இப்பாதையில் போக்குவரத்து அதிகரித்து விபத்துக்கள் ஏற்படுகின்றன. இதைப்பற்றி அப்பகுதியிலுள்ளவர்கள் அதிகாரிகளுக்கு மகஜர் சமர்ப்பித்தனர். இதைப் பற்றி அதிகாரிகள் நேரில் வந்து பார்த்து, இதை ஒரு வழிப்பாதையாக்குவதற்கான ஏற்பாடுகள் செய்துள்ளதாயும் கூடிய சீக்கிரத்தில் இது அமுலுக்கு வருமென்றும் தெரிய வருகிறது.

## எலஹெர மலேரியா பிரதேசமாக பிரகடனம்

கொழும்பு, சனி.

எலஹெரப் பகுதி மலேரியா பிரதேசமாகப் பிரகடனம் செய்யப்பட்டுள்ளது. இப்பகுதியிலுள்ள பெரும்பாலோர் மலேரியா நோயால் பீடிக்கப்பட்டிருப்பதை தொடர்ந்தே சுகாதார அமைச்சர் திரு. ஈ. எல். சேனநாயக்கா இந்த நடவடிக்கையை மேற் கொண்டார்.

இரத்தினக்கல் அகல்வதற்கு இங்கு தடை விதிக்கப்பட்டுள்ளது. இங்குள்ளவர்கள் இரத்தினக் கல் அகல்வதையே தமது தொழிலாகக் கொண்டுள்ளனர். இதனாலேயே மலேரியா ஜுரம் இங்கு இவ்வளவு வேகமாக பரவியுள்ளதாக சுகாதாரப் பகுதி கருதுகிறது.

## தனிப்பட்ட கடைகளிலும் விரைவில் நெஸ்பிரே கிடைக்குமாம்

யாழ்ப்பாணம் சனி

தற்போது பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களில் மட்டுமே கிடைக்கும் நெஸ்பிறே கூடிய விரைவில் தனிப்பட்ட சில்லறைக் கடைகளிலிருந்தும் பெறக் கூடியதாயிருக்கும். போதியளவு நெஸ்பிறே டின்கள் வந்து சேரும்வரை அத்தியாவசிய தேவையையொட்டி மட்டும் வைத்திய அத்தாட்சிப்பத்திரத்தின் பேரில் நெஸ்பிறே விநியோகிக்கப்பட விருப்பதாகவும் யாழ்ப்பாண உணவுக்கட்டுப்பாட்டதிகாரி திரு வீரசிங்கம் தெரிவித்தார்,

இம்மாதத்துக்கான முதல் கோட்டாவில் யாழ்ப்பாணத்துக்கு சுமார் 30,000 நெஸ்பிறே டின்கள் இப்போது பலநோக்கு கூட்டுறவு சங்கங்கள்மூலம் வழங்கப்பட்டு வருவதாகவும் அத்தியாவசிய தேவைகளுக்கு மட்டும் இவை வழங்கப்படுவதாகவும் அவர் தெரிவித்தார்.

வடபகுதியில் அநேகமான வியாபாரிகள் பால்மா டின்களை பதுக்கல் செய்வதனாலும் யாழ்ப்பாண மக்கள் நெஸ்பிறே பால்மாவையே அதிகமாக விரும்புவதனாலுமே இங்குபால்மாத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாகவும் உணவுக்கட்டுப்பாட்டிலாகா மேற்கொண்டுள்ள கட்டுப்பாடுகளினால் பதுக்கல் இப்போது முற்றாகக் கட்டுப்படுத்தப்பட்டு விட்டதாகவும் இனிமேல் பால்மா முக்கியமாகத் தேவைப்பட்டவர்களுக்கு மட்டும் கிடைக்க வழிவகை செய்யப்பட்டுள்ளதாகவும உணவுக் கட்டுப்பாட்டிலாகா தெரிவித்துள்ளது.

[வி. நி]

## உபசாரம்

அச்சுவேலி, ஞாயிறு.

கோப்பாய் மாவட்டத்தில் பல வருடங்களாக சுகாதார அதிபராகக் கடமையாற்றி பொல்காவலைக்கு இடமாற்றம் செய்யப்பட்ட திரு கே. ரி. முத்தையாவுக்கு அச்சுவேலி சென் திரேசர் பாடசாலையில்பிரிவுபசாரம் நடைபெற்றது.

இவ்விழாவிற்கு முன்னாள் கிராமசபைத் தலைவர் திரு. க. சுந்தரமூர்த்தி தலைமை வகித்தார். இவ் விருந்துபசாரவைபவத்தில் திருவாளர்கள். எ. ஆர். மனுவேல் பிள்ளை, எஸ். வி வேலுப் பிள்ளை ஆகியோர் சேவையைப் பாராட்டிப் பேசினார்கள்.

## ஓடும் காரை நோக்கி பொலிஸ் சுட்டது

வல்வெட்டித்துறையில் சம்பவம்

### றிவால்வரை நீட்டி குறிவைத்தார்களாம்

வல்வெட்டித்துறை. வெள்ளி

வேகமாகப்பறந்துகொண்டிருந்த கார் ஒன்றுக்குள்ளிருந்து பொலிசாரை நோக்கி றிவால்வர் ஒன்று நீட்டப்பட்டதாம். இதனைத்தொடர்ந்து பொலிசார் காரை நோக்கிச் சுட்டனராம். இச்சம்பவம் இன்றுகாலை 11 மணியளவில் வல்வெட்டித்துறை தெணியம்பை றோட்டில் நடந்துள்ளது.

பல்லாயிரக்கணக்கான ரூபா பெறுமதியான கள்ளக்கடத்தல் பொருட்களை ஏற்றிக் கொண்டு குறிப்பிட்ட கார் செல்வதாக வல்வெட்டித்துறைப் பொலிசாருக்குக்கிடைத்த இரகசியத் தகவலைத் தொடர்ந்து பொலிசார் சம்பவ இடத்திற்குப் போனபோது கார்வேகமாக வந்து கொண்டிருந்ததாம். அடுத்து காரின் பின் ஆசனத்திலிருந்து றிவால்வர் ஒன்று பொலிசாருக்குஇலக்கு வைத்துக் கொண்டிருந்ததாம். இதனை அடுத்து பொலிசார் ஒருமுறைகாரை நோக்கிச் சுட்டார்களாம். கார் நிற்காமல் 3 பொலிசாரில் ஒரு பொலிஸ் கான்ஸ்டபிளுக்கு காயம் ஏற்படுத்திவிட்டு வேகமாகச் சென்றதாம். பொலிசார் இதனைத் தொடர்ந்து கார் சென்ற திசையை நோக்கிச் சென்றதாகவும் வல்வெட்டிவேவிற் பிள்ளையார் கோவிலுக்கு அருகாமையில் உள்ள ஒரு வீட்டிற்குள் குறிப்பிட்ட கார் நிறுத்திவைக்கப்பட்டிருக்கக் கண்டார்களென்றும் பொலிசார் தெரிவித்தனர். காருக்குள்ளிருந்த சாமான்கள் யாவும் அகற்றப்பட்ட நிலையிலேயேதாம் காரைக் கண்டதாகவும் காரின் பின்பக்க இலக்கத்தகடு காணப்படவில்லை யென்றும் முதலில் காரைக் கண்டபோது வாள், துவக்கு போன்ற பயங்கர ஆயுதங்கள் இருக்கக் கண்டார்களென்றும் பொலிசார் மேலும் தெரிவித்தனர். குறிப்பிட்ட காரை வல்வெட்டித்துறைப் பொலிசார் தமது பாதுகாப்பில் வைத்துள்ளனர். கார் நின்ற வீட்டுச்சொந்தக்காரரும் பொலிசாரால் விசாரிக்கப்படுகிறார்.

## தபால் தந்தி ஊழியர் இறுதி எச்சரிக்கை

கொழும்பு, வெள்ளி

அகில இலங்கை தபால் தந்தி ஊழியர்சங்கம் தனது பொதுக்காரியதரிசி திரு. ஏ. வில்லியம் சில்வாவை மீண்டும் வேலைக்கமர்த்திக் கொள்ளாத பட்சத்தில் பெப்ரவரி 26ந் திகதி வேலைநிறுத்தம் செய்யப் போவதாக இறுதி எச்சரிக்கை கொடுத்துள்ளது.

தெவிநுவர தேர்தலின் போது அரசியல் துண்டுப் பிரசுரம் வெளியிட்டதாக திரு. வில்லியம்சில்வாவை வேலைநீக்கம் செய்யப்பட்டது.

## சீனாவின் போக்குக்கு கண்டனம்

பட்னா, பெப். 10

இங்குநடைபெறும் 8-வது ஆசிய கம்யூனிஸ்ட் வருடாந்த மகாநாட்டில் 2-வது நாளான நேற்று கம்யூனிஸ்ட் கட்சியின் அறிக்கை பற்றி விவாதம் நடைபெற்றது. 200 நாடுகளைச் சேர்ந்த வெளிநாட்டு பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். நேற்றுப் பேசிய யூகோஸ்லாவியா பிரதி நிதி சீனாவின் போக்கை மிகவும் வன்மையாகக் கண்டித்தார்,

## அம்புலன்ஸ் இல்லை

முல்லைத்தீவு, சனி

முல்லைத்தீவுஅரசினர் ஆஸ்பத்திரிக்குச் சொந்தமான அம்புலன்ஸ் வண்டி பழுதடைந்து இரு மாதங்களாகியும் கவனிப்பாரற்றுக் கிடப்பதால் கரும் நோயாளரை உடன் சிகிச்சைக்கு90 மைல்களுக்கப்பால உள்ள யாழ்ப்பாணம்பெரியாஸ்பத்திரிக்கு அனுப்பி வைக்க வேண்டிய நிலை ஏற்பட்டிருக்கிறது. இது பற்றி [illegible] அறிவித்தும் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லையாம்.

## சர்வமத மகாநாடு

வாஷிங்டன், பெப் 10

சர்வமதமகாநாடொன்று இங்கு சமீபத்தில் நடைபெற்றது. இந்து, கிறிஸ்தவ இஸ்லாமிய, பௌத்த, யூத ஆகிய மத பிரமுகர்கள் கலந்து கொண்டனர். இம்மகாநாடு ஒருநாள்மட்டும் நடைபெற்றது. இந்துமதத்தின் தத்துவங்களைப்பற்றி அமெரிக்காவில் வாஷிங்டனிலிருக்கும் திரு எம். ஹி. ராஜாராம் உரையாற்றினார்.

## யாருடையது?

யாழ்ப்பாணம் பொலிஸ் சுப்பிரண்டனின் அலுவலக வாசலில் கிடந்த அடைவு நகைறிசீட் ஒன்று எஸ். தருமகுலசிங்கம் என்பவரால் கண்டெடுக்கப்பட்டு ஈழநாடு காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர் வந்து பெற்றுக்கொள்ளலாம்.

## பெரிய சிரம...

[1ம்பக்கத் தொடர்ச்சி]

மிகக் கூடுதலானதாக இருக்கும் என எதிர் பார்க்கப்படுகின்றது.

இதற்கு முன்னோடியாக கிராம அபிவிருத்தி இலாகா சிரமதான இயக்க சம்மேளனம் ஒன்றை உருவாக்கவுள்ளது. இதற்கான நடவடிக்கைகளை யாழ், மாவட்ட கிராம அபிவிருத்திப் பகுதி உத்தியோகஸ்தர் திரு. பாலசுந்தரம் மேற் கொண்டுள்ளார்.

யாழ். மாவட்டத்திலுள்ள சகல கிராமங்களிலும்உள்ள சிரமதான இயக்கங்களும் இச்சம்மேளனத்தில் அங்கம் வகிக்கும். சகல இடங்களிலுமுள்ள தரிசு நிலங்கள், பழுதடைந்த வீதிகள், கட்டிமுடிக்கப் படாத கட்டடங்கள் ஆகியனவற்றைஇச் சிரமதான இயக்கச் சம்மேளனம் மூலம் திருத்த வேண்டிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

இதனைத் தொடர்ந்து சிரமதான மகா நாடொன்றை நடாத்த முயற்சிகள் மேற்கொள்ளப் பட்டு வருகின்றன, (கா. நி.)

## தேவை

அளவெட்டியிலும் அதை அடுத்த கிராமங்களிலும் 'ஈழநாடு' பத்திரிகை விநியோகம் செய்வதற்கு சைக்கிள் உள்ள டெலிவரி பையன் தேவை. 15-2-68ந் திகதி காரியாலயத்திற்கு காலை 9-30 மணிக்கு நேரில் வரவும்.

"ஈழநாடு"

447

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் [illegible] அச்சகம் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேல் வீதி 68-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1968-ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 11-ம்திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org